பழனி - உயர்மாதவ

சாது சுவாமிகள்

வரலாறு



உ

பழனி தண்டாயுதபாணி துணை

தவத்திரு

சாது சுவாமிகள்

வரலாறு

முதல் நூலாசிரியர்

தவத்திரு அருணகிரி நாத அடிகள்

இந்நூலாசிரியர்

ஆன்மீகக் கலை[illegible]

பாவலர் பழ.தருமம். ஆறுமுகம்

சரவணம்பட்டி, கோவை

தவத்திரு சாது சுவாமிகள்

50 ஆம் ஆண்டு குருவழிபாட்டுப் பொன்விழா வெளியீடு

வெளியிடுவோர்

தவத்திரு. சாது சுவாமிகள் திருமடம்

அடிவாரம் - பழனி - 624 601

24.10.2000

திருவள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி மாதம் 8-ஆம் நாள்.

முதல் பதிப்பு : 1951

திருத்திய இரண்டாம் பதிப்பு : 1997/5000 படிகள்

திருத்திய மூன்றாம் பதிப்பு : 2000/2000 படிகள்

திருவள்ளுவர் ஆண்டு 2031 விக்கிரம ஆண்டு ஐப்பசி மாதம் 8-ம் நாள் 24.10.2000 செவ்வாய்க் கிழமை உத்திர நட்சத்திரம் கூடிய நன்னாளில் தவத்திரு சாது சுவாமிகள் திருமடத்தில் நடைபெற்ற

பழனி

தவத்திரு சாது சுவாமிகள்

50 ஆம் ஆண்டு பொன்விழா குருவழிபாட்டு விழாவில் வெளியிடப்பெற்றது.

அச்சிட்டோர்

மாருதி கணிப்பொறி அச்சகம், புது தாராபுரம் சாலை, பழனி.

தொலைபேசி : 04545 - 45484

36/3

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார்

பேரூராதீனம் பேரூர், கோவை.

அணிந்துரை

தமிழகத்தில் சேரர் கொங்கு வைகாவூர் என அருணகிரிநாதரால் சிறப்பிக்கப் பெற்ற பழனித் திருத்தலம் பக்தி நெறியில் அன்பர்கள் தங்களை மறந்து போற்றி வழிபடும் திருமுருகன் திருத்தலம். " ஒழுக்கம், கருணை, தவம், உற்றவரை எல்லாம் இழுக்கும் பழனியப்பன்" என்று வண்ணச்சரபம் தண்டபாணியடிகளார் பழனித் திருவாயிரத்தில் அருளியுள்ளார். அப்பாடலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த உயர் அருளாளர் தவத்திரு சாது சுவாமிகள், பூவலமாகப் பலதலங்களுக்கும் சென்று, இமயம் முதல் கன்னியாகுமரி வரையுள்ள சாதுக்களுடன் தொடர்பு கொண்டவர். அதிசயம் அநேகமுற்ற பழனிமலையில் உபதேச மந்திரப் பொருட்களை அடியவர்கட்கு வழங்கித் திருத்தொண்டாலும் தவத்தாலும் சிறந்தவர்களை உருவாக்கிய அருட்செம்மல். பழனியின் பெருஞ்சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் அருட்பணிகள் பலவற்றிற்கு வழிகாட்டிய செம்மனச் செம்மல்.

இவர்களது கருணை நோக்கால் பலர் தங்கள் வாழ்வை நெறிப்படுத்தி வாழ்வாங்கு வாழ்ந்தனர். சாது சுவாமிகள் பால் வந்து பணிந்து பரவிய அன்பர்களைக் கொண்டு அமைக்கப்பட்டவை. பழனிமலைப் படிக்கட்டு மண்டபங்கள் கருங்கல் இருக்கைகள் அமைத்தவர். தங்கரதம், தங்கமயில் வாகனம் முதலியன செய்வித்தும் முருகன் திருவோலக்கத்தை முற்றுமாக வெளிப்படுத்தியவர். தனக்கென வாழாப் பேரருட்செல்வராக விளங்கியவர் அவர்களது அரிய பணிகளால் நாட்டிலேயே மிகச் சிறந்து விளங்குகிறது பழனி.

இத் திருத்தலத்திலேயே தங்கித் தவம்புரிந்த சாது சுவாமிகள் சாதுக்களுக்கும், துறவியர்களுக்கும் அன்னம்பாலிக்கும் அன்னதானப் பெருமன்றத்தைத் தோற்றுவித்து அடியவர்களைக் கொண்டு திருமலையில் உள்ள பெருமானுக்குப் புலர்காலையிலும், இரவிலும், திருமுழுக்குபால், நெய்,உலர் திராட்சை, கௌபீனம், சந்தனம், தேன், தினைமா, மாலை, அலங்காரப் பொருட்களாகியவற்றை முறையாக வழங்கும் திருத்தொண்டு நிகழச் செய்தார். அது இன்றும் தொடர்ந்து நடந்து வருகிறது.

தம்மால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களை நடத்தும் பொறுப்பைத் தமது அடியவர்களான நாகப்பூர் சுவாமிகள், தம்பி சுவாமிகள், சிவக்குமரன் சுவாமிகள் ஆகிய அடியார்களுக்குப் பகிர்ந்தளித்து நெறிப்படுத்தினார்.

அடிகளார் ஞானச் செல்வர்களிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். பேரூராதினத்தில் உரிமையுடன் வந்திருந்து ஆதீனக்குரு முதல்வர் சாந்தலிங்க அடிகளார் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழாவை இரண்டுமுறை, தாமே நடத்தியுள்ளார். இளமைக்காலத்தில் அவ்வருளாளருடன் பழகும் வாய்ப்பை பெற்றுள்ளேன்.

சாது நிறுவனம் பொறுப்புகளிலிருந்த இருதுறவிகள் மறைவிற்குப் பிறகு, சிரவைக் கௌமார மடத்தில் இளமைக்காலத்து நம்மிடம் மனமொத்துப் பழகியவராகிய சாது சிவக்குமார அடிகளார், சாது நிறுவனங்களை பொறுப் பேற்று நடத்தி வந்தார்கள். வயோதிகத்தினால் உடல் தளர்ந்த நிலையில் தமக்குத் துணையாக இருந்து நிறுவனப்பொறுப்புக்களை ஏற்று நடத்தத் தக்கவரை

அனுப்பும்படி நம்மை நாடினார். உடல் நலக்குறைவும் ஏற்பட்டது. இங்கு சில நாள் தங்கியிருந்தார். அந்த சமயத்தில் சாந்தலிங்கர் பால் ஈடுபாடு உடையவரும் நமது ஆதீனத்தில் பணியாற்றியவருமாகிய தமிழ் ஆர்வலர் சண்முகம் அவர்களுக்கு வழங்கலாம் என்று தெரிவித்ததை ஏற்று நிர்வாகப்பொறுப்பை வழங்கினார். அவர் திருமுன்பிலேயே துறவியர், அடியவர்கள், திருக்கூட்டத்தில், புனித நீராட்டி கல்லாடையும் *சாது சண்முகஅடிகள்* என்ற திருப்பெயரும் வழங்கினோம்.

சாது சுவாமிகள் வரலாறு தமிழகத்துறவியர்களது உள்ளங்களில் ஒளிபெற்று விளங்கும் சிறப்புடையது.

இந்நூல் சிறந்த சிந்தனையாளரும் பகரும் ஞானியின் பசிப்பிணிக்கு குறைவிலா அமுதூட்டிய அருட்பெறும் மாமுனிவர் சாது சுவாமிகளின் பொன் விழா ஆண்டில் (50-ம் ஆண்டில்) வெளிவருகிறது.

இந்நூலை அச்சிட்டு வழங்கும் பழனி சாதுசுவாமிகள் திருமடம் தவத்திரு சாது சண்முக அடிகளாருக்கும் இந்நூலைச் செப்பம் செய்து அழகாகப்பதித்த நம் உழுவலன்புக்குரிய சிரவை பழ-தரும-ஆறுமுகம் அவர்கட்கும், நமது ஆதிகுருமுதல்வர் சாந்தலிங்கப் பெருமான் அனைத்து நலங்களும் தந்தருள வேண்டுகிறோம்.

பேரூர் அன்புள்ள

5-4-97 *சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.*

தவத்திரு குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்

மடப்புரம், திருவாரூர் மாவட்டம்

வாழ்த்துரை

அருள் நலம் சான்ற துறவிகளுக்குப் புகலிடமாக உள்ள இடம் பழனி சாது சுவாமிகள் திருமடம். தவத்திரு சாது சுவாமிகள் வரலாற்றை பழனி தவத்திரு சாது சண்முக அடிகள் தற்போது வெளியிடுவது அறிந்தோம். திருமடாலயத்தில் இருந்து பழனி தவத்திரு சாது சுவாமிகளின் பொன்விழா குருவழிபாட்டில் வெளியிட உள்ளார்கள். தவத்திரு சாது சுவாமிகளைக் கண்டு வணங்கி ஆசி பெற்று உள்ளோம். சுவாமிகள் வரலாறு வெளிவருவது சமய உலகத்திற்கும் குறிப்பாக சாதுக்களுக்கும் பெரிதும் பயன்படும். வரலாற்றுப்புத்தகம் மிகக் குறுகிய காலத்தில் மூன்றாம் பதிப்பாக வெளிவருவதில் பெருமகிழ்ச்சி. பழனி சாது சண்முக அடிகளார் அவர்கள் பொதுப்பணி, சமயப்பணி, தமிழ்ப்பணி அனைத்தும் பன்னெடுங்காலம் நடைபெற எங்கள் குருமுதல்வர் தட்சிணாமூர்த்தி சுவாமிகளை வணங்குகிறோம்.

மடப்புரம், *தவத்திரு குமரானந்த சுவாமிகள்*
திருவாரூர். *தவத்திரு பிரமானந்த சுவாமிகள்*
மடாதிபதிகள், குருதட்சிணாமூர்த்தி மடாலயம்.

பழனி தண்டாயுதபாணி துணை

தவத்திரு சாது சுவாமிகள் தாண்மலர் வாழ்க

இரண்டாம் பதிப்பின்

முன்னுரை

உடற்பிணிகளில் தலையாயது, பசிப்பிணி உயிர்த்தொகைகள் அனைத்திற்கும் நாள்தோறும் வருவது, யாராலும் தவிர்க்க முடியாதது. உயிரானது இறைவனைப்போற்றி செய்து, சிரம் தாழ்த்திக் கை கூப்பி வணங்கி, மனதாரச் சிந்திக்கவும், வாயார வாழ்த்தவும் இறைவனுக்கும், அவன் அடியார்களுக்கும் தொண்டு செய்யவும் வாய்த்தது இவ்வுடம்பு. " உடம்பார் அழியின் உயிரார் அழிவர் திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்" என்பது திருமூலர் திருவாக்கு.

எப்பேர்ப்பட்ட ஞானிகளும் ஒருவேளையாவது உணவு உண்டு உடலைப் பாதுகாக்க வேண்டும். எவ்வுயிர்க்கும் செந்தன்மை பூண்டொழுகும் அந்தணர்கள் ஓராயிரம் பேருக்கு வீடுகட்டிக் கொடுப்பதை விடவும் ஓராயிரம் திருக்கோயிலுக்குக் கோபுரம் கட்டிக் கொடுப்பதை விடவும் நிகரில்லாத புண்ணியத்தைத் தரவல்லது, ஞானிகளுக்கு ஒருவேளை பகல் உணவு அளிப்பதே சிறப்பானது என்று திருமூலர் கூறியுள்ளார்.

எனவே தான் நம் வணக்கத்திற்குரிய சாது மாமுனிவர், பழனி அருள்மிகு ஞான தண்டாயுதபாணியை நாடிவரும் துறவிகளுக்கும் அடியார்களுக்கும் பகலுணவுஅளிப்பதற்கென்றே சண்முகவிலாச அன்னதான நிலையத்தை நிறுவியருளினார்கள்.

அவர்கள் துவக்கிவைத்த இவ்வறப்பணி அவர்களின் சீடர் பரம்பரையினரான தவத்திரு முத்துசாமி சுவாமிகள் என்னும் நாகப்பூர்சுவாமி, தவத்திரு குமரகுருபர சுவாமிகள் என்னும் தம்பிச்சாமி, தவத்திரு சிவக்குமார சுவாமிகள் என்னும் சின்னச்சாமி ஆகியோர்களால் பேணிப்பாதுகாக்கப்பெற்று வந்தது.

தவத்திரு நாகப்பூர் சுவாமிகளும், தவத்திரு தம்பிச்சாமி சுவாமிகளும் முன்னமே சமாதி நிலை எய்திவிட்டார்கள். அப்பரம்பரையில் வந்த தவத்திரு சிவக்குமார சுவாமிகள் தமக்குப்பின் இப்பணிகள் குறைவின்றி நடைபெற நமக்கு கல்லாடையளித்துத் தக்கவாறு சாசனமும் செய்து வைத்தார்கள்.

அன்னம்பாலிப்புக்கு என அவர்கள் ஏற்படுத்திய சண்முக விலாச அன்னதான நிலையம் தகரக் கொட்டகையாக இருப்பதால் பழுதடைந்தள்ளது. பகலுணவு உண்ணு அடியார்கள் வெய்யில் காலத்தில் வெப்பமிகுதியால் நிம்மதியாக இருந்து உணவுண்ணச் சிரமப்படுகின்றனர். குரங்குகள் தொல்லையும் மிகுதியாக உள்ளது.

நம் வணக்கத்துக்குரிய பேரூராதீனம் குருமகாசந்நிதானம் அவர்களிடமும் போற்றுதலுக்குரிய பொள்ளாச்சி அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்களிடம் தெரிவித்த போது மேற்படி தகரக் கொட்கையை அகற்றி சிமெண்ட் கான்கிரீட் கூரையோடு கூடிய மண்டபம் அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

எனவே நம் வணக்கத்துக்குரிய சாதுமாமுனிவர் வரலாற்றை எழுதிவெளியிட எண்ணிய நேரத்தில் கோவை கவியரசு குநடேசக்கவுண்டர் அவர்களின் புதல்வர் முனைவர் கோ.ந.முத்துக்குமாரசாமி அவர்கள், வரலாற்றுச் சுருக்கத்தின் பழைய பிரதி ஒன்றினைக் கொடுத்து உதவினார்கள். கவியரசு குநடேசக்கவுண்டர் அவர்கள் இயற்றிய சாது குருநவமணிமாலை இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளது.

பழைய தமிழ் நடையில் இருந்த அதனைத் தற்காலத் தமிழ் நடையில் எழுதும்படி கோவை சரவணம்பட்டியைச் சேர்ந்தவரும் தமிழ்ப்புலமையை பரம்பரையாகக் கொண்டவரும், நம்பால் அன்பு மிக்கவருமாகிய பாவலர் பழ-தரும-ஆறுமுகம் அவர்கள்,தனக்கே உரிய கவிதை நடையில் எதுகை மோனையோடு கூடிய சிறுசிறு தலைப்புகளுடன் எழுதிக் கொடுத்துள்ளார்.

1951 -ம் ஆண்டிற்குப்பின் நடந்த முக்கியமான செய்திகளையும், புகைப்படங்களையும் தொகுத்துச் சேர்த்ததுடன் முன்னர் எழுதப்பெற்ற சிலநிகழ்ச்சிகளின் நாள், கிழமை, நட்சத்திரம் ஆண்டு முதலியவற்றைப் பழைய நாட்காட்டிகளிலிருந்து தேடி எடுத்துக் கொடுத்துள்ளார்கள். இதனைக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த நம் அன்பர், நந்தி அச்சகம், சிவ.செ.ஆறுமுகம், செல்வன் நந்திவர்மன் ஆகியோருக்கும் ஆன்மீகக்கலைச்செம்மல் பழ-தரும-ஆறுமுகம் அவர்களுக்கும் நம் நல்வாழ்த்துக்களை இதன் மூலம் புலப்படுத்திக் கொள்கிறோம்.

இந்நிலையில் சமயப்பற்றும் சன்மார்க்கசீலமும் திருமுறை மற்றும் திவ்யப்பிரபந்தத் தமிழ் இசையை வளர்ப்பதில் ஆர்வமும் மிக்க, பொள்ளாச்சி அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்களின் 75 ஆண்டு பிறந்தநாள் விழா பங்குனித் திங்கள் 27 ஆம் நாள் (9-4-1997) புதன் கிழமையன்று அவர்களுடைய வழிபடுகடவுளான திருவிடைமருதூர் மகாலிங்கப்பெருமான் திருக்கோவிலில் நடைபெறுகிறது. அதுசமயம் இந்நூலை பேரூராதீனம் கயிலை மா.முனிவர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் இந்நூலை வெளியிடுகிறார்கள்

திருக்குறள், திருஅருட்பா, பெரியபுராணம் போன்ற அருள் நூல்களை ஆங்கிலம், இந்தி முதலான மொழிகளில் பெரும்பொருட்செலவில் வெளியிட்டும், ஏராளமான நூல்களைத் தக்க புள்ளிவிவரங்களுடன் எழுதியும் வருகின்ற ஞானதான வள்ளல் நா.மகாலிங்கம் ஐயா அன்பிற்குரிய அன்னை - மாரியம்மாள் ஆகியோரின் முத்துவிழா வெளியீடாக நம் சாதுமாமுனிவரின் வரலாற்றை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

மனத்துக்கண் மாசிலராய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துவரும் அருட்செல்வர் தம்பதியினர் எல்லாநலங்களும் பெற்று நீடூழிவாழ பழனி அருள்மிகு ஞானதண்டாயுதபாணியின் திருவருளும் நம்சாது மாமுனிவரின் குருவருளும் துணைநிற்க வாழ்த்துகிறோம்.

பழனி
5.4.2000

சாது சண்முக அடிகளார்.
மடாதிபதி. தவத்திரு சாதுசுவாமிகள் திருமடம்

பழனி தண்டாயுபாணி துணை

தவத்திரு சாதுசுவாமிகள் தாண்மலர் வாழ்க

முன்னுரை

தவத்திரு சாதுசுவாமிகள் சோழ நாட்டில் சிதம்பரம் அருகில் பெருமணநல்லூர் (ஆச்சாள்புரம்) என்று விளங்கும் ஊரில் அவதரித்தார்கள். இவர்கள் இல்லறம் ஏற்றுச் சிறிது காலத்தில் அனைத்தையும் துறந்து இந்தியநாட்டில் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து தவத்திரு நந்தியடிகளாரைக் குருவாகக் கொண்டு அவர்களிடம் துறவு பெற்று, மேலும் திருத்தலவழிபாடுசெய்து பழனி வந்து துறவியர் நலன்கருதித் திருமடம் அமைத்து அருள்மிகு சண்முகவிலாச அன்னதான சமாசம் என்று பெயரிட்டும்த் தினமும் துறவியருக்குப் பகல் உணவு கொடுப்பதற்கு அன்பர்களையும் செல்வந்தர்களையும் ஏற்பாடு செய்தார்கள்.

பழனியாண்டவருக்குத் திருமஞ்சனப் பொருட்கள், பரிவட்டங்கள் முதலிய கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். துறவியருக்கு எல்லாம் துறவியாகத் திகழ்ந்தார்கள். அவர்களுக்குப் பின் தவத்திரு முத்துச்சாமிசுவாமிகளும்,(நாகப்பூர் சுவாமிகள்) தவத்திரு தம்பிச்சாமி சுவாமிகள் (குமரகுருபர சுவாமிகள்) தவத்திரு சிவக்குமார சுவாமிகள் (சின்னச்சாமி சுவாமிகள்) என்பவர்கள் தொடர்ந்து பொறுப்பு வகித்து வந்தார்கள். தமிழகத்தில் ஏன் இந்தியாவிலேயே இந்த அளவு துறவியர் தொடர்ந்து இருப்பது அதுவும் வருடம் முழுவதும் இருப்பது எந்த வைப்புத் தொகையும் இல்லாமல் இந்த அறப்பணி நடைபெற்றுவருகிறது. இதற்கு ஒல்லும் வகையால் அறப்பணியை அன்பர்கள் ஓவாது செய்து வருகின்றார்கள். திருமடம் திருப்பணி நடைபெற்றுவருகிறது. இதைத் தொடர்ந்து செய்து அவர்களும் அவர்கள் குடும்பத்தார்களும் சார்ந்தவர்களும் எல்லா நலன்களும்பெற்று வாழ்வார்களாக. இது தற்போது மூன்றாவது பதிப்பாக வெளிவருகிறது மகிழ்ச்சிக்குரியது. மூன்றாம் பதிப்பில் பிழைத்திருத்தம் முதலியன செய்துவந்த சிவத்திரு.ஓதுவார்.ப.ஆறுமுகம் அவர்கட்கும் இதனை நன்முறையில் அச்சிட்டுக் கொடுத்த பழனி.மாருதி கணிப்பொறி அச்சகத்தாருக்கும், நமது பாராட்டுக்கள். நம் அனைவரும் எல்லா நலங்களும் பெற்று நீடூழிவாழ பழனி, அருள்மிகு ஞானதண்டாயுதபாணியின் திருவருளும் நம் சாது மாமுனிவரின் குருவருளும், துணைநிற்க வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்

சாது சண்முக அடிகளார்,

மடாதிபதி,

தவத்திரு சாது சுவாமிகள் திருமடம்,

பழனி.

ஓம்

சிவ மயம்.

அருள்மிகு ஞான தண்டாயுதபாணி துணை.

பழனியம்பதி, உயர்மாதவ

சாது மாமுனிவர் வரலாற்றுச் சுருக்கம்.

இஃது

திருவண்ணாமலை, ஈசானிய மடம்.

தவத்திரு.சி.சுப்பைய சுவாமிகள் எழுதி வைத்திருந்த விரிவான குறிப்பினைக்கொண்டு,

தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க அமைப்பாளர்,

தவத்திரு சுவாமி அருணகிரிநாதரவர்களால் தொகுத்து

சுருக்கமாக எழுதப்பெற்று

தவத்திரு நந்தியடிகள் ஆசிரமம் சாது மாமுனிவர் சமாதி நிலையம்

முதலானவைகளின் பரிபாலகர்,

தவத்திரு நாகப்பூர் சுவாமிகள் மேற்பார்வையில்

ஈரோடு உயர்திருவாளர்

வி.வி.சி.ஆர். முருகேச முதலியார் அவர்கள்,

பொருட்செலவில் இந்நூல் தயாரிக்கப்பெற்றது.

27-10-51

முதல் நூல் முகப்பு

ரகவுரை

அமிழ்திலய நம் தமிழகம் சென்ற காலத்தின் பழுதிலாத்திறனைப் பெறுவான்டேயே இறைதிருவருளால் வந்து தோன்றியவர் நம் பழநிச் சாதுமாமுனிவர் அவர்கல்பால் மிக்க அன்புண்டு, தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க நிரந்தரத் தலைவராக பதற்கு மனமுவந்து ஒப்புக்கொண்டார்கள். அப்பெருந்தகைப் பேரருளாளண்டியார்கட்கும், வறிஞர்கட்கும் உணவளித்துப் போற்றிய பண்பு, உலகம் நன்கறிற்ாகும். அம் முனிவரின் வரலாற்றைத் திருவருணை ஈசான்ய மடம் அருட்டிரு, சி.சுப்கசுவாமிகள் விரிவாகத் தொகுத்து வைத்திருந்ததை அருட்டிரு சாது சிங்காரவேல் ,ா, என்னிடம் கொடுத்துச் சுருக்கமாக விரைவில் எழுதித் தரும்படி கூறினார்கள். மயம், யான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். உடனே ஆர்வமிகுதியால், நம் நோய்க்கு .ார் சிறந்த மருந்தென வெண்ணி, இவ்வரலாற்று நூலை எழுதியளித்தேன். இந்நூலவற்றை, நோயின் மிகுதிப்பாட்டால் மறதியாய் விடப்பட்டிருப்பினும் அன்பர்கள்ந்த்தருளுமாறு வேண்டுகிறேன். நந்துறவிவேந்தன் சாதுமாமுனிவர் வரலாற்றைப் பணர்ந்து நன்நெறியிலொழுகுமாறு எல்லாம் வல்ல இறை திருவருளைப் போற்றுகி'

சென்னை நாராயண தேசிகர் ஆச்சிரமம்,
அருணகிரிநாத அடிகள்.

தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்வர். திருத்துறைப்பூண்டித் தாலூகா, சங்கேந்தி.
அருட்டிருதாசிவ அடிகள் அளித்த

்புப்பாயிரம்

அருட்டிருமா முனிவர் வரலாற்றுச் சுருக்கம் என்னும் இந்நூலைப் படித்துப் பார்த்ஜேவகை நிலங்களுக்குக்குள்ளே காட்சிக்கினிய குறிஞ்சி நிலத்தைத்தமக்குரியதாஃண்டு குன்றின் மீதமர்ந்துள்ள குகப்பெருமான் திருப்பணியே தவப்பணியாகக் டு பற்பல அறச்செயல்களைத் தன்னலங்கருதாது, பிறர் நலங்கருதச் செய்த அருஞ்செல்வர் பழநிச் சாதுமா முனிவர் என்பதை இவ்வரலாறு அழகாக எடுத்ஊட்டுகிறது. நந்தமிழ் நாட்டிற்குத் தற்காலம் இம்மாதிரியான வரலாற்று நுவசியம். அம்முனிவரின் அருஞ்செயல்களை இவ்வரலாற்று நூலிற் படித்லாம். (இதனை இதனாலிவன் முடிவுக்கு மென்றாய்ந்ததனை அவன்கடல்) என்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க இவ்வரலாற்று நூலை வரைரும்படி தமிழ்ச்செம்மலும், சங்கம் நிறீஇய துங்கனுமாகிய, சென்னை அரு. அருணகிரிநாத அடிகள் பால்விடலாயிற்று. அவர்களும் அன்புடன் எழுதி உர்கள். குன்றின் மீதமர்ந்த குமரன் திருவருள்பெற விரும்பும் மெய்யன்பர்கள் பஞ்நூலைப் பெரிதும் பாராட்டுவார்களென்று நம்புகின்றேன்.

உண்மை அன்புள்ள
கு.க. சதாசிவம்.

உ

அன்புரை

எனது குருநாதன், அருட்பெருஞ்செல்வர் சாதுமா முனிவர் அவர்கள் வரலாற்று சுருக்கம் பார்க்க என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது. இந்நூலைப் பார்க்கும் போதெல்லாம். குருநாதன் காட்சியாகவே எண்ணுவேன். அம்மகானுடைய அருஞ்செயல்களை, இந்நூல் அழகாகவும், தெளிவாகவும், எடுத்துக் காட்டுகிறது. இந்நூலை மக்கள் அனைவரும் படித்துப் பயனடையுமாறு எல்லாம் வல்ல அன்னை பராசக்தியைத் துதிக்கின்றேன்.

பழநி நந்தியடிகள் ஆச்சிரமம்

திருமூர்த்தி சுவாமிகள்

உ

அணிந்துரை

ஞானசம்பந்தப் பெருமான் திருமணத்திற் சோதியுடன் கலந்த, ஆச்சாள்புரமென வழங்கும், திருப்பெருமண நல்லூரில் தோன்றி மக்கள் உய்வான்வேண்டி, திருப்பழநி மலையடிவாரத்தில் வந்தமர்ந்து, பல அற்புதச்செயல்கள் புரிந்து அருட்பெருஞ்சோதியிற் கலந்த, நம் சாதுமா முனிவரை அறியாதவர் பெரும்பான்மையும் இன்றெனவே கூறலாம். தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்துகிடப்பதே என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கின்படி, பற்பல அற்புதத் திருப்பணிகளை அப்பழநியம்பதியில் இன்றும் கண்டு களிக்கலாம். சேர, சோழ, பாண்டிய நாட்டுச் செல்வர்கள் பலரைக்கொண்டு, அருட்டிரு நாகப்பூர் சுவாமிகள் வாயிலாய் செய்துள்ள, திருப்பணிகள் பலப்பலவாகும். தமிழுக்கும், சைவத்துக்கும் ஒரு சிறந்த தொண்டு தற்காலத்திலே சுவாமிகள் செய்தருளியுள்ளார்கள். என்பதை இச்சாதுமா முனிவர் வரலாற்றுச் சுருக்கத்தில் மிக விரிவாய்க் காணலாம். சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும் குறைந்து வரும் நிலைகண்டு நந்தமிழ் முருகன் சுவாமிகளைக் கொண்டு செய்வித்தானென்றே கூறலாம். இந்நூலுள் நுழைந்தால், அவற்றை நன்றாக அறிந்துகொள்ள இயலும். சுவாமிகளோடு பன்னெடு நாள் நெருங்கிப் பழகிக்கண்டு, மகிழ்ந்த யான், இவ்வரலாற்று நூல் மக்கள் உள்ளத்தில், அறச்செயல் புரியும் மிகப் பேரருளை நல்குமென்றே நம்புகிறேன்.

இந்நூலை, அன்பர்கள் அனைவரும் படித்துணருமாறு வரைந்துதவிய நல்லன்பர் உயர்வீரத் துறவியும், நந்நூல்கள் வரைந்து நம் நாட்டிற்குதவிய நலமிகு சீலரும், தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க ஸ்தாபகருமாகிய, உண்மைத் தமிழன்பர், அருட்டிரு அருணகிரிநாத அடிகளாராவார்கள். இவ்வுயரிய நூலை அருட்டிரு சாது மாமுனிவரின் முதலாண்டு குருபூசை விசேடதினத்திலேயே அச்சிட்டு வெளிப்படுத்தப்பேரார்வமுற்று முன்வந்த பெருந்தகையாளர்

சைவ சித்தாந்த மகாநாடு, திருமுறை மகாநாடு முதலிய மகாநாடுகளை இப்பழநியம்பதியிலேயே நடத்தியும் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு தங்க ரதம், மயில் வாகனம் முதலியவைகளைச் செய்தளித்தவருமாகிய, ஈரோடு உயர் திருவாளர் முருகேச முதலியார் அவர்கள், இவ்விருவரும் காலத்தினாற் செய்த நன்றி, என்றும் மறக்கற்பாலதன்று. இவ்வரலாற்றுச் சுருக்க நூலைத் தமிழ் மக்களனைவரும் படித்து இன்புறுமாறு முருகப்பெருமான் திருவருளை மனமொழி மெய்யொன்றி வணங்குகின்றேன்.

அன்பு ஓங்குக! இன்பம் வளர்க!!

சிதம்பரம், மௌனானந்த பாதசேகரன்

சாது சிங்காரவேல் அடிகள்

வெண்பா

ஆறுபதி னொன்றாயிரத்துத் தொளாயிரத்தோ
டேறும் ஐம்ப தாங்கிலத்துக் கேல்விகிர்தி -கூறுதுலாத்
திங்களிரு பத்தொன்றாந் தேதியிற்சா துச்சாமி
மங்கைபங்கன் தாள்சேர்வாழ் வாம்

கட்டளைக் கலித்துறை

மாகன மார்பழ நித்தண்ட பாணியாம் வள்ளலுக்கு
யோகம தார் சாது மாமுனி நற்றொண் டுவந்தியற்றிப்
போகமுனி நற் புலிப்பாணி பாலையர் போன்றுயர்ச்சி
ஆகும் பழனி வரைப்பால் தவஞ்செய் தமர்ந்தனரே.

தவத்திருவடிகள்

பொன்னம்பலசிவம்,

பழனி.

ஓம்

சிவமயம்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி துணை

பழனியம்பதி உயர்மாதவ மாமுனிவர்

சாது சுவாமிகள் வரலாறு

(காப்பு வெண்பா)

மாதவச் சாது வரலாறு -(உ)லகறிய
ஓத உரைநடையில் ஒண்தமிழால்-ஏதம் அற
உள்நின்(று) அருளும் ஒலிவேழ மாமுகவன்
வண்ணத் திருத்தாள் மலர்

சாது முனிவர் வணக்கம்

(எழுசீரடியாசிரிய விருத்தம்)

உலகெலாம் உய்ய ஐந்தொழில் விரிய
உமை ஒருபால் இருந் (து) அருள
அலகிலா நடம்செய் அம்பல வாணன்
அருளினால் உலகினில் தோன்றி
நலமலி *நந்தியடிகளார்* அருளால்
நல்தவ ஞானியாய் அன்பர்
மலம் ஒரு மூன்றும் ஒழித்தருள் *சாது*
மாமுனிவரன் அடி பணிவாம்

உலகில் உயிர்த் தொகைகள் எல்லாம் உய்ய, படைத்தல் முதலான ஐந்தொழில்களும் தம்திருவுருவில் அமைய அம்பலவாணன் இன்ப நடம் புரியும் இடம், திருத்தில்லை எனப்பெறும் சிதம்பரத்தில் திகழும், செம்பொற்கோவில்.

இத்திருத்தலத்திற்குத் தெற்கில் ஆச்சாள்புரம் உள்ளது. தீம்புனல் பாயும் காவிரியாற்றின் பகுதியாகிய கொள்ளிட ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. சீர்காழிப் பகுதியில் அம்மையின் அருள்ஞானப் பாலருந்தித் தேவாரத் தேனமுதம் நாவாரப் பொழிந்த திருஞானசம்பந்தர் தன் திருமணத்திற்கு வந்திருந்த அடியார்களும் அன்பர்களும் சூழத் திருமணக் கோலத்தோடு சிவப்பேரொளியில் இரண்டறக் கலக்கப் பெற்றதால், இவ்வூர் நல்லூர்ப்பெருமணம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றது.

இவ்வூரில் தொண்டை மண்டல சைவ வேளாள மரபினர் வாழையடி வாழையென வாழ்ந்து வருகின்றனர். இத்திருக்குலத்தினர் சிவனடியார்களிடத்தும், சிவபெருமான் இடத்தும் இடையறாப் பேரன்பு கொண்டவர்கள். இல்லறத்தில் இருந்து நல்லறம் செய்து, விருந்தோம்பி, வேளாண்மை செய்பவர்கள். இவ்வூரில் பெரு நிலக்கிழாராகிய *முத்துக்கிருட்டிண முதலியார்* என்னும் தமிழ்ப்பெரு மகன் இருந்தார். அவருடைய பெருநிலப்பண்ணைகளில் புளியந்துறை முதலிய பல ஊர்கள் இன்றும் இருக்கின்றன. திருமண நல்லூர்ப் பெருமான் திருக்கோவிலின், கிழக்கு வாயில் பெரிய கோபுரம் அவரால் கட்டப்பெற்று காலத்தை வென்று இன்றும் நிமிர்ந்து நின்று அவருடைய சிவத் தொண்டினை எடுத்துக்காட்டுகிறது. அதுவுமின்றி அத்திருக்கோயிலில் நாள் வழிபாடுகள், பூசனைகள், திருவிழாக்கள் ஆகியன குறைவின்றி நடைபெறவும் படித்தரக்கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இத்தகு அறப்பெரும் செல்வராகிய முத்துக் கிருட்டிண முதலியார், தம் சிவபுண்ணியத்தால் அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் ஆடவர்க்கு உரிய நற்பண்புகள் நான்கும் நன்கமையப் பெற்ற பொன்னுச்சாமி முதலியார் என்னும் தவப்புதல்வரைப் பெற்றெடுத்தார்.

பொன்னுச்சாமி முதலியாரும் இளமையிலேயே "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்னும் தமிழ் மறை மொழிக்கு இலக்காகக் கற்றுணர்ந்தொழுகி, வாழ்ந்தார். தந்தையைப் போல் சொல்லறம் திறம்பா இல்லறம் ஏற்று நல்லறம் புரிய எண்ணினார். கற்பிற் சிறந்த நற்கன்னிகையாகிய

காவேரியம்மையைக் கடிமணம் புரிந்து கருத்தொருமித்த காதலுடையவர்களாய், தங்கள் குலப்புகழை விளக்கும் நலப்பணி பலவும், புலப்படச் செய்து அன்பொடு கலந்து இன்பவாழ்வு வாழ்ந்து வந்தனர்.

அறப்பெருஞ்செல்வர் - சிவப்பெருஞ்சீலர்-சந்திப்பு


அறப்பெருஞ்செல்வராகிய பொன்னுச்சாமி முதலியார் அவர்களது சமயப்பற்றினைக் கேட்டறிந்த, காரைக்குடி, அறுபத்து மூவர் திருமடத்துச் சைவப்பெரியார் சிவப்பெருஞ்சீலர் ***திரு சொக்கலிங்க ஐயா*** அவர்கள், ஆச்சாள்புரம் வந்தார். திருக்கோயிலில் சிவதரிசனம் செய்த போது இருவருக்கும் அறிமுகம் ஏற்பட்டு நட்பு உண்டாகியது. அது முதல் அப்பெரியார், பொன்னுச்சாமி முதலியார் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்து சிவதரிசனம் செய்துவந்ததோடு, அன்பர்களுக்குச் சைவ சமய நூல்களைப் பாடம் சொல்லிவந்தார்.

புத்திரப்பேறு குறித்து நற்றவம் செய்தல்


இவ்வாறு இருந்து வரும் நாளில், பொன்னுச்சாமி முதலியாருக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. இதனால் மனம் மிக வருந்தினார். தன் வாழ்க்கைத் துணைவியோடு தில்லையம்பதிக்குச் சென்றார். அங்கு தம் மைத்துனர் ***பழநி முதலியார்*** அவர்கள் இல்லத்தில் தங்கினார். நாள்தோறும் காலையில் நன்னீராடிப் பட்டாடை உடுத்திச் சிவபூசை முடித்து புறத்தூய்மையோடு அகத்தூய்மையும் ஒருங்கே அமையப் பெற்றவர்களாய்க் காலை மாலை இருவேளையும் பொன்னம்பலத்திற்குச் சென்று முறையாக அம்பலவாணன் அடியினை பணிந்து தங்கள் இன்னல் களைய இதயம் கசிந்துவழிபட்டு வந்தனர்.

தாண்டவன் அருளால் வேண்டியது பெறுதல்

பொன்னுச்சாமி முதலியார் - காவேரியம்மையார் ஆகியோரின் தவவழிபாட்டுக்குத் தாண்டவப் பெருமான் திருவுளம் இரங்கினான். சிவநெறியும், சிவனடியார்களும் சிறந்து விளங்கும்படி செய்யவல்ல சேய் தோன்றுமாறு திருவருள் புரிந்தான். தாண்டவம்புரியும் வல்ல தம்பிரானின்



தவத்திரு நந்தியடி சுவாமிகள்




தவத்திரு சாது சுவாமிகள்

இளமைத்திருக்கோலம்

தவத்திரு சாது சண்முக அடிகளார்

மடாதிபதி



நந்தியடிகள் ஆசிரமம்



தனிப்பெருங்கருணையினால் பொன்னுச்சாமி முதலியார் நன்மனம் மகிழ அவர்தம் நல்லற மனைவி காவேரியம்மையின் கருவில் திருவுடை மகவாய் உருவது கொண்டு, விக்ருதி ஆண்டு பங்குனித்திங்கள் 17 ஆம் நாள் (30-3-1890) ஞாயிற்றுக்கிழமை, நற்கோள்கள் உச்சம் பெற்றிருந்த நல்ல நேரத்தில் மாதினியார் திருவயிற்றிலிருந்து இடையறாப்பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின் படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும் நடையறாப் பெருந்துறவும், ஞானப்பாடல் தொடையறாச் செவ்வாயும் உடையவறாய் வாகீசப்பெருந்தகையாகிய திருநாவுக்கரசர் திரு அவதாரம் செய்தது போல் நம் சாது மாமுனிவர் உலகில் தோன்றினார்.

பிள்ளைத் திருநாமம் தில்லைச்சபாபதி

தில்லையம்பலவாணனின் திருவருளால் தோன்றிய பிள்ளையாதலால் தாய்தந்தையர் தங்கள் அருமைத் தவப்புதல்வனுக்கு *சபாபதி* எனப் பிள்ளைத் திருப்பெயர் சூட்டிப் பாராட்டிச் சீராட்டிப் பரிவோடு வளர்த்து வந்தார்கள்.

வெள்ளிடை மலையாய் விளங்கிய பிள்ளை

நம் சபாபதி தாலப்பருவங்கடந்து சப்பாணி கொட்டி அம்புலிகாட்டி அருளமுதூட்டி சிற்றில் சிதைத்துச் சிறுவரோடு கூடிச் சிறுதேருருட்டி யருளும் பருவமும் கடந்து பள்ளியிற் பயிலும் பருவமாகிய ஆறாவது பருவம் தொடங்கிற்று. தம்மையொத்த சிறுவர்களோடு சேர்ந்து தெருவில் ஆடித்திரிவதைவிட்டுப் பெரியார் இணக்கத்துட்பட்டுப் பெருமண நல்லூர்ப் பெருமானை வழிபடுதலைப் பெரிதும் விரும்பினார். பெற்றோர் சொல்லுக்குக்கட்டுப்பட்டுப் பேணிநடக்கும் பெற்றிமை பெற்றார். யார் எதைக்கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் அன்போடு எடுத்துக் கொடுத்து மகிழும் பண்பினை இளமையிலேயே பெற்றார். எளிமையும், இனிமையும் அன்பும், பண்பும் பிறவியிலேயே பெற்றவரானார். இவ்வமைதிகண்டு பெரியார்களும் அடியார்களும்,

ஆன்றோர்களும் சான்றோர்களும் பெருவியப்படைந்தனர். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்ற பழமொழி சரியாய் இருக்கிறதே! சபாபதியின் முகப்பொலிவும் குணச்செழிப்பும் நடைப்பண்பும் பின்நாளில் இவன் ஆதவன் போல் ஒளிபரப்பி அஞ்ஞான இருள் அகற்றும் மாதவனாகி, மக்கட்பணிசெய்து குன்றின்மீது வைத்த விளக்காய் ஒளிர்ந்து பெரும்புகழ் பெறுவான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் வெள்ளிடை மலையாய் விளங்குகின்றது எனப் பெரியோர் பலரும் போற்றி மகிழ்ந்தனர். தாய் தந்தையரிடம் தக்க சொற்களால் புகழ்ந்து போற்றினர். வாயார வாழ்த்தினர். அருகில் அழைத்து நெற்றியில் திருநீற்றுக் காப்பிட்டு அகமிக மகிழ்ந்தனர்.

தாமார்க்கும் குடியல்லாத் தகைமையாளர்

முளையிலிருந்தே நன்மணம் கமழும் மரிக்கொழுந்தினைப் போல் பிறப்பிலிருந்தே நல்லியல்பும் நற்குணமும் கமழப்பெற்ற நம் சபாபதிக்குக் கல்வி கற்பிக்க எண்ணினார் பொன்னுச்சாமி முதலியார். சீர்காழியில் உள்ள முதலியார் உயர்நிலைப்பள்ளியில் கொண்டு போய்ச் சேர்த்துத் தமிழும் ஆங்கிலமும் பயில வைத்தார்கள். பன்னிரண்டு வயது முடியும் வரையில் சபாபதி அப்பள்ளியில் பயின்று வந்தார். பின்பு ஆங்கிலப்படிப்பில் வெறுப்புத் தோன்ற, ஆங்கிலேயரிடம் அடிமைத் தொழில் (உத்தியோகம்) செய்ய விரும்புபவர்கள்தானே இதனைப் படிக்க வேண்டும். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற பரம்பரையில் வந்த நாம், ஏன் ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும். இதுவரை படித்ததுபோதும். இனிமேல் இந்த ஆங்கிலப் படிப்பைப் படிக்கமாட்டேன் என்று கூறிவிட்டார். " தன்னையும் தன்னுயிர்க்கு ஆதரமான தலைவனையும் அறிந்து அடைதற்கு உரியதான அமிழ்தினும் இனிய தாய்த் தமிழையும் சமசுகிருதக் கலையையும் தான் கற்பேன்.", என உறுதிகொண்டார். தாமார்க்கும் குடியல்லாத் தகைமையாளராகிய சபாபதி.

அம்பலவாணனே அனைத்துயிர்க்கும் தந்தை

சபாபதி, தமக்கு ஆங்கிலம் பயிலுவிக்கும் ஆசிரியரிடம் சென்றார். தம் கருத்தைத் தயக்கமின்றி அவரிடம் தெரிவித்துவிட்டு அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினார். தக்க தருணம் பார்த்துத் தம் தந்தையாரிடம் தமது கருத்தைத் தெரிவித்தார். இதனைக் கேட்ட பொன்னுச்சாமி முதலியார் மிக்க சினம் அடைந்தார். சபாபதியை நோக்கி "அடே! உனக்கு அவ்வளவு துணிவு வந்துவிட்டதா? ஆங்கிலப்படிப்பு வேண்டாம் என்று என்னிடமே வந்து சொல்லுகிறாயா? பி.எ., எம்.ஏ.,பி.எல்., முதலிய பட்டங்களைப் பெற்றால் மட்டுமே உயர்ந்த பதவிகள் உன்னை வந்தடையும். பல நாடுகளுக்குச் செல்லலாம், பாராட்டுக்கள் பெறலாம், பணம் தேடிக் குவிக்கலாம். வளமாக வாழ விரும்புபவர்கள் எல்லாம் பணம் செலவழித்துப் படிக்கும் ஆங்கிலப்படிப்பை விட்டுவிட்டுப் பரதேசிப் படிப்பை படிக்கவா விருப்புற்றாய்" என்று பதறினார்.

" மிகவும் நன்றாயிருக்கிறது உன் செயல்" என இகழ்ந்தார்." நீ ஆங்கிலம்படித்தால் தான் உனக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இடமும் தருவேன். இல்லையேல், உனக்கு இங்கு ஒன்றும் கிடைக்காது என்பதை உணர்ந்துகொள்!" என்று உறுதிபடக் கூறினார்.

இதனைக் கேட்ட சபாபதி" அப்படியா? முட்டைக்குள் இருக்கும் கருவுக்கும், கல்லினுள் இருக்கும் தேரைக்கும் வேண்டிய அமுதத்தினை வாரி வழங்கும் அப்பனாகிய அம்பலவாண்னே அனைத்து உயிர்களுக்கும் அருமைத் தந்தையாவான். அவனிருக்கும் போது எனக்கு என்ன கவலை? அவன் திருவடியை உறுதியாய்ப் பற்றிக் கொள்வேனாகில் என்னை ஊட்டி வளர்க்கானோ? பார்க்கின்றேன்."! எனத் தாய்தந்தையர் இருவரும் உணரும்படி அறிவுறுத்திவிட்டு அகன்று சென்றார்.

அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கிய தில்லை

சபாபதி, நல்லூர்ப்பெருமணம் விட்டகன்று தில்லையம்பதியைச் சென்றடைந்தார். அங்கு குனித்த புருவமும், கொவ்வைச்செவ்வாயில் குமிண்சிரிப்பும், பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும் கொண்ட எம்பெருமானின் இனிமை மிக்க எடுத்த பொற்பாதத்தைக் கண்ணாரக் கண்டு நெஞ்சாரத் தொழுது வணங்கினார்.

அம்மான் அன்பும் பெம்மான் அருளும்

தில்லைப் பெம்மானை வழிபட்டு, சிதம்பரத்தில் தேவாரப்பாடசாலை வைத்து நடத்துவதோடு தமிழும், வடமொழியும் கற்பித்துவரும் தம் அம்மான் *பழனியப்பமுதலியார்* வீட்டுக்குச்சென்றார். சபாபதி அவரைக்கண்டு வணங்கித் தம் நிலையைப் புலப்படுத்தினார். அதற்கு அவர் மிகவும் மனம் மகிழ்ந்தார். கட்டியணைத்து உச்சிமோந்து மெச்சிப்புகழ்ந்தார். பின்னர் சபாபதியைப் பார்த்து, " அப்பா! குழந்தாய் இந்தப் பாடசாலையும் இதற்குரிய சொத்துக்கள் யாவும் உன்னுடையதே! நம் மரபில் தமிழையும் வடமொழியையும் நன்கு கற்றுணர்ந்தவர்கள் யாருமில்லை! இப்போது முதல் எனக்கு அக்கவலை அகன்றது. இருமொழிகளையும் நீ நன்றாய்ப் படித்துப் பெரும்புலமை எய்துவாயாகில் அதைவிட வேறு பெரும்பேறு எனக்கில்லை" என்று கூறி அன்பும் ஆர்வமும் ததும்ப, நம் சபாபதியை அரவணைத்து ஆனந்தம்கொண்டார். தம் இல்லத்திலேயே தங்கவைத்தார்கள். தம் மகவினும் பன்மடங்கு அன்பு காட்டி ஆதரித்து ஊட்டி வளர்த்தார். தம் பாடசாலையிலுள்ள தக்க ஆசிரியப் பெருமக்களைக் கொண்டு சபாபதிக்கு அவர் விரும்பிய வண்ணம், தமிழ் சமசுக்கிருதம் ஆகிய இருமொழிகளையும் பயிலச் செய்தார்கள். அவ்வாறு பயின்று வரும் காலத்தில் அம்மான் பழனியப்ப முதலியாரின் தாயன்பில் திளைத்திருந்தாலும் நாள்தோறும் திருப்பொன்னம்பலத்திற்கு விருப்பமுடன் சென்று, தில்லை நடராசப்பெருமான் திருவடிகளை வணங்கித் திருவருளில் மனம் கலந்தார்கள்.

தில்லைமவுனசுவாமிகள் அறிமுகம் எல்லையில்லாத பெருமிதம்

திருச்சிற்றம்பலத்திற்குப் போகும் போதெல்லாம் அங்கு ஒரு துறவறப் பெரியாரைக் கண்டார்கள். அவர் ஒரே கோவணத்தோடு வந்து அம்பலவாணனை வணங்கிச் செல்வதையும் அறிந்தார்கள். அவர்தான் ***தில்லை மவுன சுவாமிகள்***. அம்பலத்தில் நடனமாடும் ஆடலரசனை வணங்குவதோடு மோன நிலையில் நடமாடும் குருவான மவுன சுவாமிகளையும் குறிப்பாக வணங்கி வரும் வழக்கத்தை மேற்கொண்டார் சபாபதி. ஒருநாள் அவரைப் பின்பற்றிச் சென்று அவர் இருக்கும் ஆசிரமத்திற்குப்போய், அவர் திருவடிபணிந்து தன்னை இன்னாரென்று அறிமுகப்படுத்திக் கொண்டார். பின்னர் பலநாள் அவருக்குத் தொண்டு செய்து அளவற்ற பெருமிதம் கொண்டார்கள்.

சூக்கும மந்திரத் தீக்கை பெறுதல்

சபாபதியின் அன்புகலந்த தொண்டின் நோக்கத்தை மாதவத்தவராகிய மவுன சுவாமிகள் மனத்துணர்ந்தார்கள். முழுவெண்மதி ஒளிரும் ஒருநல்ல நாளில் சபாபதியைத் தனியாக அருகில் அழைத்தார்கள். பின்னர் முறைப்படி சூக்குமத் திருவைந்தெழுத்தை உபதேசித்தருளினார்கள். அக்கணத்திலிருந்து நம் சபாபதி அம்மந்திரத்தை அன்போடும் அமைதியோடும், சிதறாத சிந்தனையோடும், பதறாத சிரத்தையோடும் உள்ளத்துள் ஓதி வரலானார்கள். அதன் பின்னர் திண்ணியராகிய நம் சபாபதி எண்ணிய எண்ணியாங்கு எல்லா நலன்களையும் எய்தினார்கள். இவ்வாறு பாடசாலைப் படிப்பிலும், பரமன் அடியார் வழிபாட்டிலும், பஞ்சாக்கர செபத்திலும் மூன்று ஆண்டுகள் முழுமையாக ஓடின.

தாண்டவப்பதி தாண்டி மீண்டும் ஆச்சாள்புரம்

"இனிமேல் அடியார் உறவும், ஆன்றோர் சேவையும் அரன்பூசை நேசமும் ஆலய வழிபாடுமே நாம் செய்யத்தகுவன" என்பதனை ஒருநாள் உணர்ந்தார் நம் சபாபதி முன் செய்த புண்ணியப்பயனாய் இவையே நமக்கு உற்ற பெருந்துணையாய்

நின்று இறுதியில் பேரின்பப் பெருவாழ்வாகிய பேற்றினைப் பெற்றுத்தரத்தக்கன " என முடிவு செய்தார்கள். இம்மனக் கருத்தினைத் தம் அருமை அம்மானாகிய பழனியப்ப முதலியாரிடம் எடுத்துக் கூறினார்கள். அவரிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு, ஆச்சாள்புரத்திற்கு மீண்டு தமது இல்லத்தை அடைந்தார்கள்.

ஈன்றோர் வணக்கமும் சான்றோர் இணக்கமும்

நாள்தோறும் அதிகாலையில் எழுந்து தன்னை ஈன்றெடுத்த தாய் தந்தையரை வணங்கினார்கள். பின்னர் காலைக்கடன்களை முடித்து நன்னீராடி நறுமலர் எடுத்து நார்கொண்டு தொடுத்து நல்லன்போடு பிள்ளையாருக்குச் சூட்டி வழிபாடு செய்தார்கள். முற்றத் துறந்த முனிவராகிய பட்டினத்தடிகள் அமிழ்தினும் இனிய தமிழ்க்கவிபொழிந்த தாயுமானார், ஞானப்பாடல் தொடையறாச் செவ்வாயினையுடைய நாவுக்கரசர் ஆகிய அருளாளர்களின் திருவுருவப் படங்களைத் தன்னுடைய தனியறையில் வைத்துத் தக்கவாறு வழிபட்டார்கள். அவர்கள் திருவாய் மலர்ந்த அருட்பாக்களையும், அவர்களின் அருளிச் செயல்களைக்கூறும் வரலாறுகளையும் படித்தார். *தனியிடத்திலமர்ந்து* இயமநியமாதிகளாகியயோகப் பயிற்சிகளைச் செய்தார். தங்கள் இல்லத்திற்கு எழுந்தருளும் ஆன்றோர்களுடனும் அடியவர்களுடனும் இணங்கிய மனத்தோடு நட்பு பாராட்டினார். அவர்தம் குறிப்பறிந்து அவர்கட்கு வேண்டுவன செய்தார். பக்தி வைராக்கிய ஞான நூல்களை அவர்களிடம் கேட்டறிந்தார். இவ்வாறு ஞானவேட்கை யுடையவர்களுக்குரிய நன்னடத்தையில் ஈடுபட்டு வந்தார் நம் சபாபதி.

அன்பினால் விளைந்த அவதூறு

நம் சபாபதியின் தந்தையார் பொன்னுச்சாமி முதலியார், தம் இல்லத்தில் இருந்துவரும் சைவப்பெரியார் *சொக்கலிங்க ஐயா* அவர்கள் மூலம் திருமுறைப்பாடல்கள் சித்தாந்த சாத்திரங்கள் மற்றும் புராணங்களைப் பல அன்பர்களுக்குப்பாடம் சொல்லி வந்தார்கள். சபாபதியும் சொக்கலிங்க ஐயா அவர்களிடம் நால்வர் நான்மணிமாலை முதலாகக் கந்தபுராணம் வரை பல பக்தி இலக்கிய நூல்களையும், சைவ சித்தாந்த நூல்களில் முதன்மையதாகிய

சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய நூல்களையும் பாடம்கேட்டு உவந்தார்கள்.

இது இவ்வாறு இருக்க பொன்னுச்சாமி முதலியார், தம் மகன் சபாபதி சிவம்பெருக்கும் சீலர்களாக விளங்கிய அடியார்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தலைக் கண்டு மனம் வருந்தினார். "இவன் இருக்கும் நிலையைப்பார்த்தால் துறவியாகி விடுவான் போல் தோன்றுகிறதே?" என மனத்துள் எண்ணினார். சபாபதி மீது வைத்துள்ள பேரன்பினால், வரும் அடியவர்களிடத்தில் சபாபதியைப்பற்றி அவதூறு கூறினார். " சுவாமிகளே இந்தப்பையன் மகா துட்டன்! உங்களிடம் மிக்க நல்லவன் போல் நடிப்பான். பின்னர் உங்களையே திட்டுவான். இவனை நீங்கள் அருகில் சேர்க்காதீர்கள் '' என்று சொல்வார் தந்தையாரின் இந்தச் சொற்களை நந்தம் சபாபதி சிந்தையில் உணர்ந்து சினம் கொள்ளாது கொவ்வைச் செவ்வாயிற் குறுநகைபுரிவார்.

கைவல்யம் படித்ததும் சைவப்பெரியார் அடித்ததும்

ஒருநாள் சபாபதி அடியார்களிடம் கற்று வந்த கைவல்ய நூலைத் தனித்துப் படித்துக் கொண்டிருந்தார் அதனைச் சைவப்பெரியார் சொக்கலிங்க ஐயா பின்புறமாக வந்து நின்று பார்த்தும் காதிற்கேட்டும் மிக்க சினம் கொண்டார். மனம் துடித்தார் சைவன் ஒருவன் கைவல்யம் படிக்கலாமா? இவனுக்குப்போய் சைவ சித்தாந்த நூல்களைப்பாடம் சொல்லி வைத்தோமே? அவற்றையெல்லாம் ஆற்றில் கரைத்தபுளி ஆக்கிவிட்டானே என்று தனக்குத்தானே மிக இரைந்து சத்தம் போட்டார். சொக்கலிங்க ஐயா அவர்கள் கூக்குரலிடுவதைக் கேட்ட சபாபதியின் தாயும் தந்தையும் பரபரப்புடன் ஓடிவந்து பார்த்தார்கள். அவர்கள் இருவரையும் அருகில் பார்த்ததும் சொக்கலிங்க ஐயா" ஐயோ! உங்கள் பயல் மிகவும் கெட்டுவிட்டான். வேண்டாத புத்தகங்களையெல்லாம் விரும்பிப் படிக்கின்றான். இனிமேல் இவன் உங்களுக்கு எள்ளளவும் உதவமாட்டான்" என்று சொல்லி வருந்தினார். அது கண்டு சபாபதியின் பெற்றோர்களும் மிக்க துயர் எய்தினார்கள்.

மனம் வருந்தி மன்றாடியும், சினம் சிறிதும் குன்றாதவர்?

முதல் நாள் நடந்தவற்றைக் கண்டிருந்தாலும் நம் சபாபதி மறுநாள் காலையில் சொக்கலிங்க ஐயாவிடம் வழக்கம்போல் பாடம் கேட்கப்போனார். அவரைக்கண்டதும் அப்பெரியார், " இனிமேல் நாம் உனக்குப்பாடம் சொல்ல முடியாது"! என்றுகூறிவிட்டார். சபாபதி மனம் மிக வருந்தி மன்றாடி வணங்கிக் கேட்டும் அவர் எக்காரணம் கொண்டும் தன் முடிவை மாற்ற முடியாது என மிக்க கண்டிப்புடன் கூறிவிட்டார்.

பற்றற்றான் பற்றினைப் பற்றிய பெற்றியர்

எதிலும் பற்றற்றவனாகிய இறைவனது இணையடிகளில் மட்டுமே பற்றுவைத்து மனம் பற்றியவரான நம் சபாபதி, "ஐயா இனிமேல் நீங்கள் எனக்குப்பாடம் சொல்லாவிட்டால் பரவாயில்லை. யாம்! பாடங்கேட்ட அளவுக்கு பரம குருவாகிய பரம்பொருளின் திருப்பாதங்களன்றி வேறுபற்று ஒன்றும் எமக்கு இல்லை. யாம் எண்ணிய எண்ணியாங்கு எய்திட அப்புண்ணியத் திருவடிகளின்பால் யாம் வைத்துள்ள திண்ணியபற்று எமக்கு என்றும் உறுதுணையாக இருக்கும். தாங்கள் இனிமேல் எம்மைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். இதுகாறும் எமக்குப்பாடம்சொல்லி வந்த தவஞானியாகிய தங்கள் திருவடிகளுக்கு வணக்கம்! போய் வருகிறேன். "எனத் திருவாய் மலர்ந்தருளி அவ்விடம் விட்டு அகன்றார்கள்.

திருமணத்திற்கு மயங்காத பெருமனம்

இவ்வாறு இருக்கும் நம் சபாபதியின் நடத்தைகளைப் பார்த்து கொண்டிருந்த பொன்னுச்சாமி முதலியாரும் காவேரி அம்மாளும், இனிமேலும் இவனை இப்படியே விட்டுக் கொண்டிருக்கக்கூடாது. ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்துவிட்டால் எல்லாம்சரியாகி விடும்"என எண்ணினார்கள். தங்கள் மரபில் குடிப்பிறப்பும் குலச்சிறப்பும் மிக்க ஒரு பெண்ணின் நல்லாளைத் தேர்ந்தெடுத்தார்கள். உற்றாரும் உறவினரும் சுற்றமும் நட்பும் சூழ ஒரு நல்ல நாளில் நம் சபாபதிக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். இத்தகைய

மணவினையால் நம் சபாபதியின் மனம் மயங்கிவிடவில்லை. அடியார்கள் பால் கொண்ட உறவும் நீங்கிவிடவில்லை. தாய்தந்தையர் கருத்தறிந்து நடந்துகொண்டாலும் அவர்கள் அறியாவண்ணம் அடியார்களுக்குத் தொண்டு செய்துவந்தார்கள். சபாபதியின் இச்செயலில் தாய்தந்தையருக்கும் மனைவிக்கும் விருப்பமில்லை என்பதனை அறிந்து கொண்டார்கள்.

தனிமையில் தான்கண்ட இனிமை

ஒருநாள் பொன்னுச்சாமி முதலியார் சபாபதியை அழைத்து புளியந்துறைக் கிராமத்திலுள்ள தமது பண்ணையைப் போய்ப் பார்வையிட்டு வரும்படி பணித்தார்கள். அதனைக்கேட்ட நம் சபாபதி," இதுவரை நம்மை எங்கும் தனித்துச் செல்லும்படி கட்டளையிட்டிராத நம் தந்தையார் இன்று தனியாகப் போய் வரும்படி ஏவியது வியப்பாக இருக்கிறது. இதுவும் நமது நன்மைக்கே ஆகும்." என எண்ணி மிக்க மகிழ்ச்சியோடு புளியந்துறைக்குப்போய்ப் பண்ணையை மேற்பார்வையிட்டு வீட்டிற்கு திரும்பிவரலானார்.

கற்றாவின் குரல்கேட்டுகருணை மடிசுரந்த நற்றாய்

வரும் வழியில் மகேந்திரப்பள்ளித்தலத்தில் உள்ள திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கினார். அங்கு மிகப்பெரியாராகிய ஒரு துறவியைக் கண்டார். அவர் திருமண நல்லூரில் கோயில் கொண்டருளியுள்ள இறைவனை வணங்கச் சென்று கொண்டிருப்பதை அறிந்து கொண்டார். அப்பெரியார் முன் சென்று திருவடியில் வீழ்ந்து வணங்கினார். எழுந்து இருகைகளையும் சிரமேற்குவித்த வண்ணம் தேம்பித் தேம்பி அழுதார். அதனைக் கண்ட அப்பெரியார், "இவன் ஒரு பெருந்தவப்புதல்வன், என்று கருதி மகிழ்ந்தார். “ஏனப்பா அழுகிறாய்? "எனப்பரிவுடன் வினவினார் ", மேலும் தொடர்ந்து " மலையிலே புல்லை மேய்ந்து கொண்டிருக்கும் கறவைப்பசு, மாலையில் தன்கன்றை நினைத்துக் கதறிக் கொண்டு மடிசுரந்து பால் கொடுக்க கீழே இறங்கி

ஓடிவரும். கன்றும் தாய்ப் பசுவின் குரல் கேட்டு மிக்க ஆவலுடன் எதிரே ஓடி வந்து முட்டி முட்டிப் பால் குடிக்கும். ஏற்கெனவே கன்றை நினைத்து கரைந்து சுரந்து இருக்கும் மடியைக் கன்றுமுட்டுவதால் மிக்கவலி ஏற்பட்டாலும் தாய்ப்பசுவானது இன்ப நிலை எய்தி இறுமாந்து நின்றிருக்கும். மீண்டும் மறுநாள் காலையில் பசு மலையேறும்: புல்மேயும்: மாலைவரும்: மடிசுரக்கும்: கீழிறங்கி ஓடிவரும்: கூட்டியிளங்கன்று முட்டி முட்டிப்பால்குடிக்கும். இந்த நிகழ்ச்சி அன்றாடம் தொடரும். இதற்கு ஏன் கவலைப்படுகிறாய்," என்று மற்றவர்க்கு விளங்காத மொழியில் (பரிபாசையாக) சொன்னார். இன்னும் பல அருள்மொழிகளைச் சொல்லிவிட்டு அவர் போக்கில் சென்றார்.

சேடமான பாலை அருந்திய விசேடம்

நம் சபாபதியும் அந்த அருளாளரை விடாமல் பின்பற்றிச் சென்றார்.ஆச்சாள்புரத்தில் தாங்கள் குடியிருக்கும் வீதியினை அந்த அருளாளர் அடைந்த போது, தன் அன்னையும், தந்தையும் அறியாவண்ணம் தன் அருமை நண்பன் ஒருவன் வீட்டில் அப்பெரியாரை உட்கார வைத்தார். நண்பனிடம் " உன் வீட்டில் பால் இருக்கிறதா?" எனக் கேட்டார். நண்பனும் மகிழ்ச்சியோடு, "வேண்டிய அளவு இருக்கிறது." எனச் சொல்லி ஒரு செம்பு நிறையப்பால் கொண்டுவந்தான். அப்பாலை வாங்கி அணுவினுள் அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் நின்ற அந்த அப்பெரியாரிடம் அளித்தார். அவர் அதை வாங்கி அருந்தி சேடமான (மீதியான) பாலை நம் சபாபதியிடம் அளித்தார். அன்புடன் வாங்கி, அன்று சீர்காழிக்குளக்கரையில் அழுத ஆளுடைய பிள்ளையாகிய ஞானசம்பந்தப் பெருமானுக்கு அன்னை பொற்கிண்ணத்தில் அளித்த ஞானப்பாலே அருட்சிறப்பு மிக்க (விசேடமான) இப்பால் எனக்கருதி நம் சபாபதி அதனை வாங்கி உட்கொண்டார். அகம்மிக மகிழ்ந்த அப்பெரியார் அன்போடும் நம் சபாபதியை அருள்நோக்கம் செய்து, " ஐயா, பக்தி மிக்க உமது எண்ணம் எல்லாம் இனிதே நிறைவேற எல்லாம் வல்ல அன்னை பராசக்தி அருள்புரிவாள். அஞ்சாதீர்!" என வாழ்த்திவிட்டு அங்கிருந்து போய்விட்டார்.

சத்தியை வழிபட்டுச் சித்திமிகப்பெற்ற வித்தகர்

இவ்வாறு நம் சபாபதிக்கு அருள்பாலித்த அப்பெரியார் திருவிசைநல்லூரினைச் சேர்ந்தவர். எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டு வாழ்ந்து வரும் சிறப்பு மிக்க அந்தணர் குலத்தில் பிறந்தவர். யாரும் அறியாவண்ணம் தனிமையில் அமர்ந்து அரசர்க்கெல்லாம் அரசியாகிய அன்னை இராசராசேசுவரியை வழிபட்டு சித்தி பெற்றவர் இவருக்கு இளமையிலேயே மணமாகி இருந்தது.

இவரது மனைவி பூப்பு அடையவில்லை. அதனால் அவர் தன் தாய் வீட்டிலேயே இருந்தார். இந்த நிலையிலும் அந்த அந்தணப் பெரியார், தன் மனைவியாகிய நங்கை நல்லாளை இந்த உலகிற் கெல்லாம் அன்னை - அகிலாண்டேசுவரி, செகதீச்வரி - எழுந்தருளியிருக்கிறாள் என்று கூறிக் கொண்டே இருப்பாராம். அவரது உயர்ந்த எண்ணத்தை அறியாதவர்கள் இவன் ஒரு பெண் பித்தன் என்று கூறுவார்களாம்.

இவரது மனைவி பருவம் எய்திப் பூப்பு அடைந்தாள். அவளது பெற்றோர் தக்க மரியாதைகளோடு திருவிசைநல்லூருக்கு அழைத்து வந்தார்கள். ஒரு நல்ல நாளில் சாந்தி முகூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்யப் பெற்றது. அம்மங்கை நல்லாளுக்கு அணி மணிகள் பூட்டிப் பட்டாடை கட்டி, சிகை அலங்காரம் செய்து, வாசனைப் பொருட்கள் பூசி, நறுமணமலர்கள் சூட்டி அழகான ஒரு தேவதை போல் பள்ளியறைக்கு அனுப்பிவைத்தனர்.

பத்தினி நல்லாள் மருளில் சத்திநிபாதம் பெறுதல்

அலங்காரங்களோடு அழகுத் தேவதையாய் அறைக்குள் நுழைந்த ஆரணங்கைக் கண்ட அந்தணர் அவளை ஆசையோடு கட்டியணைத்து ஆலிங்கனம் செய்யவில்லை. தன் அகத்துள் வைத்து அனுதினமும் ஆராதனை செய்துவரும் அன்னை அகிலாண்ட நாயகியே அங்கு எழுந்தருளியதாக நினைத்தார். பள்ளியறை அவருக்கு முழுமுதலாகிய அன்னை எழுந்தருளியிருக்கும் மூலத்தானம்

போலக்காட்சியளித்தது. பஞ்சணை, பீடம்போல்த் தோன்றியது. அதன்மீது தன்மனைவியை அட்டணைக் காலிட்டு அமரவைத்தார். எல்லாம் வல்ல இறைவியாகப் பாவித்தார். பள்ளியறையில் வைக்கப் பெற்றிருந்த பால், பழம், பூ,சந்தனம், பன்னீர் முதலியவற்றைக் கொண்டு பூசை செய்து மனம்உருகி வழிபட்டார். "அன்னையே! அகிலாண்ட நாயகியே! இந்த அண்ட பகிரண்டத்திலும் இருக்கின்ற அனைத்துயிர்களையும் உன் அருளால் பாதுகாக்கின்ற உன் பெருங்கருணைப் பெருமையை அடியேனால் பேசவுங் கூடுமோ? அம்மா! எள்ளளவும் அருகதையில்லா அடியேனுக்கு அருள்பாலிக்க வேண்டும்" என உள்ளன்போடு வேண்டினார்.

கண்கள் இரண்டினையும் மூடிக், கணவனின் செயல்களுக்குக் கனிவாக ஒத்துழைப்பு நல்கி கருணாம்பிகையாய்க் கட்டிலின் மேல் அட்டணைக் காலிட்டு அமர்ந்திருந்த கற்பின்மிக்க வெட்புடைய அக் கன்னி நல்லாள் மீது ஆவேசம் தோன்றியது. அகில உலகத்தையும் தன் அருட்சக்தியால் அரவணைத்து ஆட்கொண்டிருக்கும் அன்னை அகிலாண்டநாயகி, அந்தக் கணநேரம் அவ்வாரணங்கின், அங்கைத் தலத்தில் தன் சக்தியைச் செலுத்தினாள்.

அந்த அம்மையார் தேவியின் ஆவேசத்தோடு, தன் வலக்கையை எடுத்துத் தன் அன்புக் கணவனாகிய அந்தணாளரின் சிரசில் வைத்தார். அப்போது மின்னல் வெட்டியதுபோல் அவருள் அன்னையின் சக்தி மின்சாரம் போல் பாய்ந்தது. அம்பிகையின் அருட்பெருங்கருணையினால் அவருக்குச் சத்தினிபாதம் என்னும் அனுக்கிரகம் ஏற்பட்டது.

திருவருள்பெற்ற சைதன்யபாரதி குருவருள்பெறுதல்

அந்த அந்தணர் அவ்விரவிலேயே, அழகே உருவான தன் அருமை மனைவியாகிய ஆரணங்கினையும் அருந்தவமிருந்து தன்னைப் பெற்று அன்போடு வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களையும் மறந்தார். ஆசாபாசங்களைத் துறந்தார்.

அக்கணமே வீட்டிலிருந்து வெளியேறினார். கால்போன போக்கில் அவர் போனாலும், காந்தத்தின்பால் ஈர்க்கப்படும் இரும்பைப் போல், சாந்த சொரூபியாகிய அன்னை சாராதா தேவியாக அருட் செங்கோலோச்சும் சிருங்கேரி பீடத்தைச் சென்றடைந்தார். அப்போது அங்கு ஆச்சாரியராக அமர்ந்திருந்தவர் ***நரசிம்ம பாரதி தீர்த்த சுவாமிகள்.*** அவரைக் குருவாக ஏற்று அவரிடம் துறவாச்சிரமம் பெற்றுச் ***சைதன்ய பாரதி*** என்னும் திருப்பெயரையும் பெற்று விளங்கினார். இவர் தான், நம் சபாபதிக்குப் பால் கொடுத்து அருள்பாலித்தவர்.

தந்தையினும் மிக்க அன்புடைய நந்தியடிகளார்

இத்தகைய பெருமை வாய்ந்த சைதன்ய பாரதியாரால் ஆட்கொள்ளப் பெற்ற நம் சபாபதியாருக்கு, இவ்வுலக வாழ்க்கையிலிருந்து வெறுப்பு முன்னையிலும் மிகுதியாயிற்று. அச்சமயத்தில் திருக்கைலாய நந்தியம்பெருமான் பரம்பரையில் வந்த நந்தியடிகள் என்னும் பெரியார் திருமண நல்லூருக்கு திருத்தலப்பயணமாக வந்தார்கள். அவரை நம் சபாபதியாரின் தந்தையாகிய அன்பர் பொன்னுச்சாமி முதலியார் அழைத்து வந்து தம் இல்லத்தில் எழுந்தருளியிருக்கும்படி செய்து மிக்க அன்போடு உபசரித்து வந்தார்கள்.

நம் சபாபதியாரும் தந்தையினும் மிக்க அன்புடையவராய், செந்தண்மைமிக்க நந்தியடிகளார் பால் சிந்தைவயப்பட்டார். அப்பெரியாரின் குறிப்பறிந்து பணிவிடைகள் செய்தார். அவர் உள்ளம் நெகிழும் வண்ணம் வேண்டிய தொண்டுகளை விரும்பிச் செய்தார். சபாபதியாரின் நல்லொழுக்கம் நற்பண்புகள், நன்னடத்தை, ஆகியவைகளைக் கண்டு வியப்புற்று ,மகிழ்ந்தார். திருவுளம் நயப்புற்று நம் சபாபதியாருக்குத் திருவருட் கண்ணோக்கம் செய்து, மீண்டும் தம் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டார்கள். பின் நாளில் இவர்தான் நம் குருவாக வந்து நம்மை ஆட்கொள்ளப்போகிறார், என்று சபாபதியார் ஒரு சிறிதும் எண்ணவில்லை.

முள்ளின் மலர்வாய்த் தேனை ஒத்த இல்லறம் துறத்தல்

பின்னர் நம் சபாபதியாருக்கு முன்னை நல்வினைப் பயன் முன்வந்து நின்றது. திண்ணிய மனத்துடன் இதுகாறும் செய்த இறைவழிபாட்டின் புண்ணியம் அவரை நண்ணியது. " அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்ற தாயுமானவரின் அருள் வாக்கிற்கு ஒப்ப, அன்பர் பணியாலும், ஆன்றோர்கள் செய்த அருள் நோக்கத்தாலும், அகத்தூய்மையாலும், அதிதீவிரமான துறவறநிலை அவரை ஆட்கொண்டது.

பிறவிப்பயனை அடைவதற்குரிய பேரின்பத்தினைத் தேடிச் செல்ல மனம் அவாவிற்று. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும், பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும் கொண்டு, அனைத்துயிருக்கும் அருள்பாலிக்கத் தில்லையம்பலத்தில் அனவரதமும் ஆடிக்கொண்டிருக்கும் அம்பலவாணனின் இனித்தமுடையஎடுத்த பொற்பாதத்தைக் காணுதலே இம்மனித்தப் பிறவியின் பயன் ஆகும். முள்களால் சூழப் பெற்ற மலரில் நிறைந்திருக்கும் தேனைப் போன்ற, இவ்வுலக வாழ்க்கையால் எய்தும் சிற்றின்பத்தைக் கனவிலும் கருதேன். இனி ஒரு கணமும் இதில் மதிமயங்கி, இருக்கமாட்டேன் என்ற வைராக்கியம் ஏற்பட்டது. ஒருநாள் நள்ளிரவில் தன் தாய் தந்தையரையும், அன்பு மனைவியையும் வீட்டையும், பெரும்செல்வத்தையும் துறந்து வெளியேறினார். மயிலைக் கொடியாக உடைய (சிகித்துவச) மன்னன் தன் அரசாட்சியையும், பட்டத்து அரசியையும் விட்டுத் துறவறம் மேற் கொண்டதே போல், தன் இடையில் கட்டியிருந்த ஒரே ஆடையோடு அவ்விடம் விட்டகன்றார். இது நடந்த ஆண்டு 1914 ஆகும்.

கோவணம் பூண்டவரும் கோவண ஆண்டவரும்

பசி வந்த போது அடியார்கள் அளிக்கும் உணவுகளைக் கையாற ஏற்று அப்படியே நின்று அருந்தினார். இறைவனோடு இரண்டறக்கலப்பதற்கு இம்மனித உடம்பு ஒரு கருவியாகும். அந்தப் பேரின்பப் பெருநிலை எய்தும் வரை இதனைப்பாது

காத்திடல் வேண்டும். இதனையே திருமூலர்

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்!
திடம்பட ஞானம் சேரவும் மாட்டார்!
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே !
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!

எனக் கூறியிருக்கிறார். இவ்வாறு பிச்சை ஏற்று உணவுண்டு நாடெங்கும் யாத்திரை செய்து கொண்டு வந்தார்கள்.

அந்நிலையில் இடையில் கட்டியிருந்த ஓராடையும் மிகப் பெரிய சுமையாகத் தெரிந்தது. அதையும் அவிழ்த்து எறிந்தார். ஒரு துண்டுத்துணியைக் கொண்டு கோவணம் மட்டும் கட்டிக் கொண்டார். “ பாரனைத்தும் பாரம்! பொருள் அனைத்தும் பொய்'' எனத் துறந்த பட்டினத்தடிகள் போலானார். போற்றுதலும் தூற்றுதலும் விடுத்தார். ஏகாந்த நிலைமை எய்தினார். பல தலங்களுக்கும் சென்று வழிபட்டார். ஒரு நல்ல நாளில், கோவணாண்டியாய் நின்று, இத்தமிழ் கூறும் குவலயத்து மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்து குடிகொண்டு நிலைபெற்றிருக்கும் தண்டாயுதபாணி எழுந்தருளியிருக்கும் பழனியம்பதியை வந்து அடைந்தார்.

ஒற்றைக்கால் மண்டபத்தில் நிட்டை கூடுதல்

மலைமீது எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மன நெகிழ்ச்சியோடு வணங்கி மகிழ்ந்தார். இப்படிச் சிலகாலம் ஏகாந்தமாய் இருந்தார். அடிவாரத்தில் உள்ள திருவாவினன் குடியினையும் தினந்தோறும் வழிபட்டார். அங்குள்ள ஒற்றைக்கால் மண்டபத்தில் யாரும் அறியா வண்ணம் கடுந்தவம் மேற் கொண்டார். அங்கு அவருக்கு நிட்டை கூடியது.

பற்றறுத்த முனிவருக்குச் சுற்றத்தார் இடையூறு

வீட்டைத் துறந்து விடுதலை பெற்றுத் துறவியாகிச் சென்றதிலிருந்து நம் சபாபதியாரைத் தேடியலைந்த சுற்றத்தார், பழனியில் இருப்பதாகக் கேள்விப்பட்டு பழனிக்கு வந்து அடிகளைக் கண்டார்கள். பலவந்தப் படுத்தி வீட்டுக்கு வரும்படி அழைத்துக் கொண்டு திருமண நல்லூருக்கு வந்து சேர்ந்தார்கள்.

இல்லத்தில் இருத்தி வைத்து வேண்டிய வரையில் புத்திமதி சொல்லிப்பார்த்தார்கள். அவர்கள் கூறிய அறிவுரைகள் ஒன்றும் அடிகளார் செவியில் ஏறவில்லை. யார் எதைச் சொன்னாலும் மறுமொழி ஒன்றும் கூறாது மவுனமாகவே இருந்தார்கள். இரண்டொரு நாள் சென்றதும் யாரும் அறியாமல் வெளியேறிவிட்டார்கள். இவ்வாறே சிதம்பரம், மதுரை, திருக்கழுக்குன்றம் முதலான தலங்களில் இருக்கும் போதும் கண்டுபிடித்து, அழைத்துப்போய் வீட்டில் வைத்துப் பலவாறு சொல்லிப்பார்த்தார்கள். தன் ஏகாந்த நிலைக்கு இடையூறு செய்யும் அவர்களைப் பார்த்து "கோவணாண்டியாய் ஊரெல்லாம் அட்டசோறு நம்மதே என்று பசிவந்த போது கைப்பிச்சை வாங்கி உண்டு விட்டு சிவ்னே என்று எங்கேயாவது குந்தியிருக்கின்ற என்னை நீங்கள் இழுத்து வந்து வீட்டில் வைத்துத் தொந்தரவு கொடுப்பது மிக்க துன்பமாக இருக்கிறது. தடை செய்யாமல் என் போக்கில் விட்டுத் தயவு செய்யுங்கள். பின்னர் உங்களுக்குப் பெரும் புகழும் பெறற்கரிய பேறும் நன்மையும் உண்டாகும் " என்றார்கள். அவர் கூறியதில் பொதிந்திருந்த கருத்தினை அறியாத அவர்கள் அடிகளாரைப் பார்த்து, "இதோ இங்கிருக்கும் பெரியவீடும் பெருஞ்செல்வமும் உன்னுடையதே. இதனைவிட்டுக் கோவணாண்டியாய்த் திரிவானேன். பருத்திநூல் துணியை விடப் பன்மடங்கு தூய்மையுடையதாகிய இப்பட்டாடையை உடுத்திக்கொள். துறவியானால்த்தான் பிறவியறுக்க முடியுமா? இல்லறத்திலிருந்து அந்த ஞானத்தை அடைய முடியாதா?

ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து

என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்கல்லவா?" எனப் பலவாறு எடுத்துக் கூறினார்கள்.

ஒருநாளும் ஓர் ஊரும்

உற்றாரின் இம்மொழிகளை உற்றுக் கேட்ட அடிகளார் சரி, சரி! இவர்களுக்கு நம் ஏகாந்த நிலை புரியாது. நாம் என்ன சொன்னாலும் இவர்கள் காதில் ஒன்றும் ஏறாது என எண்ணி மவுனமாக இருந்துவிட்டார்கள். சிலநாள் சென்றபின் யாருக்கும் தெரியாமல் வழக்கம் போல் வீட்டை விட்டு வெளியேறினார்கள்.

நாம் ஒரே ஊரில் தங்கினால் தானே இந்த அன்புத் தொல்லை என மனத்தில் எண்ணி, ஒரு நாளைக்குமேல் எந்த ஊரிலும் தங்கியிருக்காமல் போய்க் கொண்டே இருந்தார்கள். இவ்வாறு சென்று நாறு மலர்க் கந்திப் பொதும்பர் எழு காரலைக்கும் சீரலைவாய்ச் செந்திற்பதி புரக்கும் செவ்வேளாகிய செந்திலாண்டவனை வழிபட்டு, திருநெல்வேலி சென்று நெல்லையப்பரையும் காந்திமதி அம்பாளையும் வணங்கினார்.

கங்கையில் மூழ்கிக் கடுந்தவத்தில் ஆழ்தல்

பின் திருவனந்தபுரம், உடுப்பி, சுப்பிரமணியம், கொல்லூர் மூகாம்பிகை, திருக்கோகர்ணம், மைசூர் முதலான மலை நாட்டுத் திருக்கோயில்களையும் கன்னடநாட்டுத் திருதலங்களையும் வணங்கினார். தெலுங்கு நாட்டுத் திருப்பதிகளையும் சேவித்தார்.

பம்பாய், அரித்துவாரம், இருடிகேசம், (ரிசிகேசு) அயோத்தி முதலிய தலங்களையும், இடையிடையே இருந்த சிறுசிறு தலங்களையும் தரிசனம் செய்தார். இறுதியாகக் காசியம்பதிக்குச் சென்று கங்கையில் மூழ்கி எழுந்து காசிவிசுவநாதரையும் விசாலாட்சியையும் வணங்கினார். அங்கிருந்த நல்ல துறவிகளின் நட்புக் கிடைத்தது. அவர்களோடு கூடிக் கடுந்தவத்தில் மூழ்கிச் சில ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்தார்.

அன்னபூரணி உபாசனை செய்யச் சொன்ன குருநாதர்

சபாபதியாரது பக்குவநிலையைக் கண்ட அவரது ஞானாசிரியர், இவரை நாள்தோறும் நான்கைந்து நல்லடியார் வீடுகளில் கையேந்தி பிச்சை ஏற்று உண்டு கொண்டே வடநாட்டில் யாத்திரை செய்து, இறுதியில் இமயமலையில் உள்ள சத்திய நாராயணத்தை அடையும்படி கட்டளையிட்டார்கள். அங்ஙனமே சத்திய நாராயணம் என்னும் சந்நதியை அடைந்தார். அங்கே இவரது வருகையை எதிர்பார்த்து இவரது ஞானாசிரியராகிய பரமசற் குருநாதர் வீற்றிருந்தார். பரிபக்குவநிலையில் இருந்த சபாபதியார் அவருடைய பாதம் பணிந்து நின்றார். அவருக்கு ஞானாசிரியர் அன்னபூரணி உபாசனையினை முறைப்படி உபதேசம் செய்தார். துறவு நிலைக்குரிய காவி உடையை அணியும்படி பணித்தார்.

காசியிலேயே தங்கியிருந்து அன்னபூரணியை ஆராதனை செய்து வரும்படி ஆணையிட்டருளினார். நம் சபாபதி அடிகளும் அங்ஙனமே சில ஆண்டுகள் காசியில் தங்கியிருந்து ஆராதித்து வந்தார்கள்.

"சாது மாமுனிவர் " ஆக்கிய மாதவ மவுன சுவாமிகள்

சபாபதி அடிகளார் அன்று முதல் கல்லாடை புனைந்தார். தலைப்பாகை தரித்தார். கையில் நெற்றிமட்டத் தண்டேந்தினார். எந்நாட்டிற்கும் இறைவனானவன் சிவனாக எழுந்தருளி இருக்கும் தென்னாடாகிய நன்னாட்டுக்குத்திரும்பினார். படைத்தல், காத்தல், அழித்தல், முதலான ஐந்தொழில்களையும் தன்னுள் அடக்கி ஆடிக்கொண்டிருக்கும் அம்பல வாணனைத் தில்லையில் சென்று வழிபட்டார்.

முன்னரே அங்கு நம் சபாபதி அடிகளாருக்குத் திருவைந்தெழுத்தை உபதேசித் தருளிய மாதவ மவுன சுவாமிகளின் ஆசிரமத்துக்குச்சென்றார். அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து இருகைகளையும் சிரமேற்குவித்த வண்ணம் நின்றார்கள். சபாபதி அடிகளாரைக் கண்டதும் மவுன சுவாமிகள் மட்டிலடங்கா மகிழ்ச்சி பொங்க, " ஓ! சாது! வருக வருக!" எனக் கூறித் தம் அருகில் அழைத்து அமரும்படி செய்தார். அங்கே இருந்த அன்பர்களையும் அடியவர்களையும் நோக்கி " இவர் ***மகா சாது*** இவரை அனைவரும் வணங்கிக் கொள்ளுங்கள்"என்று கூறியருளினார். அவர்கள் அனைவரும் அப்படியே நமது அடிகளாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து திருநீறு பெற்றுக் கொண்டார்கள். மவுன சுவாமிகள் அன்பு கலந்த இனிய மொழிகளால் நம் சாது மாமுனிவருடன் அளவளாவி மகிழ்ந்தார்கள். அன்று முதல் நம் சபாபதி அடிகளாருக்குச் ***சாது சுவாமிகள்*** எனும் ***திருப்பெயர்*** வழங்கலாயிற்று.

பாம்பன் சுவாமிகளைப் பணிந்து பக்குவம் பெறுதல்

முற்பிறப்பில் முருகப்பெருமானை வழிபட்டு, விட்டகுறை முற்றுப்பெறுவான் வேண்டி, முருகன் திருவருள் நம் சாதுமாமுனிவரை ஈர்த்தது. சிதம்பரத்தினை அடுத்துள்ள பின்னலூரில் இருந்து பெருந்தவம் புரிந்து வந்த பாம்பன்

சுவாமிகள் என வழங்கும் உயர்மாதவ *குமர குருபரதாச சுவாமிகளைப்* போய்ப் பணிந்து வணங்கினார். அவர்களுடன் சிலநாள் இருந்தார். முருக உபாசனை உபதேசம் பெற வேண்டும் என்ற தமது எண்ணத்தை தக்க தருணமறிந்து பாம்பன் சுவாமிகளிடம் கூறினார். அவரும் நம் சாதுமாமுனிவருக்கு முருகப்பெருமான் பூசனை மற்றும் உபாசனை முறைகளை தக்கபடி உபதேசம் செய்தார். பின்னர் பாம்பன் சுவாமிகளிடம் விடைபெற்றுக் கொண்டு திருத்தலப்பயணம் மேற்கொண்டார்.

அருணாசல சுவாமிகளிடம் அருள்மிகப் பெறுதல்

சாது மாமுனிவர் அவ்வாறு யாத்திரை செய்யும் போது வேதாந்தத்தின் நுண்ணிய கருத்துக்களையும், முடிவுகளையும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் அவருள் உண்டாயிற்று. அப்போது கோவிலூர் ஆதீனம் அருணாசலசுவாமிகளைப் போடிப்பட்டியில் கண்டு வணங்கினார். சில மாதங்கள் அவருடன் தங்கியிருந்து அவர்களிடம் வேதாந்தத்தின் முடிவான (கீதாபாடியம், உபநிடதபாடியம், பிரம்ம சூத்திர பாடியம் ஆகிய பிரத்தானத் திரையங்களின்) சாரத்தை பாடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

சமயத்திற்கேற்ற வேடம்புனைந்த சமய ஞானி

பின்னர், சாதுமாமுனிவர், பலசமயங்களின் கொள்கைகளையும் முடிவுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் புறப்பட்டுச் சென்றார். எவ்வெச் சமயத்தை அறிய முற்படுகிறார்களோ அவ்வச் சமயத்தார்க்குரிய வேடங்களைத் தாங்கினார். எந்தச் சமயத்திலும் தன் சமயத்தினை மறந்தாரில்லை. வேடத்தில் தான் மாற்றம். அவரவர்களுடைய மொழிகளையும் கற்று அவர்களிடம் பேசி அவரவர் தம் கொள்ளைகளையும் தெரிந்து கொண்ட பின்னர் மீண்டும் தன் சமய வேடம் கொண்டார். இந்தி முதலான பல மொழிகளிலும் புலமை பெற்றார்.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் வணங்கல்

வடநாடு நோக்கிச் சென்ற சாது சுவாமிகள், முன்னம் யாத்திரை செய்தபோது சென்று காணாத பலதலங்களுக்குச் சென்று சிறப்புமிக்க பல மூர்த்தி, தலம், தீர்த்தங்களை முறையாய்க் கண்டு வணங்கினார். நேப்பாளம் சென்றார். இந்து சமய ஆட்சி இன்றும் நடைபெறும். ஒரே நாடு நேப்பாளம் தான். அங்கு செங்கோலோச்சிய அரசராலும் அடியார்களாலும் போற்றப்பெற்றார். அங்கு பலமாதங்கள் தங்கியிருந்தார்கள்.

திருநகரம் சென்று தேவிபூசை செய்தல்

தேவி பூசை செய்ய வேண்டும் என்ற சிந்தையுடன் நேப்பாளத்திலிருந்து திருநகரம் (ஸ்ரீ நகர்) சென்றடைந்தார். அறுபத்துநான்கு ஆயகலைகளும் அறுபத்து நான்கு படிகளாக அமைத்திருக்கும் சர்வக்ஞ பீடத்தை அடைந்தார். மாதக்கணக்கில் அங்கு தங்கியிருந்து வணங்கி மகிழ்ந்தார்.

காச்மீர் நகரில் பாய்ந்த கருணை வெள்ளம்

திருநகரை அடுத்துள்ளதும் தேவிபூசை செய்வதில் சிறப்புடைய பலர் நிறைந்திருப்பதுமான காச்மீர நகரம் சென்றடைந்தார் நம் சாது மாமுனிவர். அங்குள்ளவர்களில் பெரும் செல்வந்தரும் முறையாகத் தேவிபூசை செய்பவரும் சந்நியாசிகளிடம் நிறைந்த அன்புடையவருமான ஒருவரின் இல்லத்தில் தங்கியிருந்தார். அப்போது," ஆதிசங்கரர் சகல சாத்திரங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்து, முடிவான வேதாந்த மதத்தை நிறுவியவர். ஆனாலும் சக்தி வழிபாட்டை முறையாகச் செய்வதும் மற்றவர்களைச் செய்யச் சொல்வதுமாகத்தானே இருந்தார்கள், ஆகவே நாமும் நம் ஆத்ம குருவின் அருளுபதேசப்படி அன்னபூரணியாகிய தேவியின் வழிபாட்டைத் தொடர்வது அவசியமே" என எண்ணினார். அதற்குரிய நூல்களை ஆராய்ந்து மேலும் சிறப்பாகத் தேவி பூசையைத் தொடர்ந்தார். காச்மீர் நகரில் கல்லாடை புனைந்த கருணைத்துறவியான நம் சாது சுவாமிகளின் அருள்வெள்ளம் கனிந்து பாய்ந்தது.

பனிமலைப் பகுதிகளில் மேற்கொண்ட பாதயாத்திரை

சாதுமாதவர் பின்னர் திபேத்துக்குச் சென்றார்கள். அங்கிருந்த காளிகோவிலில் தங்கி வழிபாடு செய்து பலநாள் இருந்தார்கள். அங்குள்ள அன்பர்கள் பலரும் அடிகளாரை வணங்கி அருள்பெற்றார்கள். அங்கிருந்து பனிபடர்ந்த பருப்பதமாகிய இமயமலை மீது பாதயாத்திரை மேற்கொண்டார்கள். திருக்கேதாரம் பத்திரிநாதம் கங்கோற்பத்தி முதலான திருத்தலங்களுக்கு க்டும்பயணம் செய்து வணங்கி மகிழ்ந்தார்கள் நம் சாது சுவாமிகள். அத்தோடு வடநாட்டுத் தல யாத்திரையை முடித்துக் கொண்டு தென்னாட்டுக்குத் திரும்பி வந்தார்கள்.

சுண்டூர்க் குமாரசாமி தரிசனம் கண்டு மகிழ்தல்

தென்னாடு திரும்பி வரும்போது தெலுங்கு நாட்டில் பல்லாரி மாவட்டத்திலுள்ள வரநகரத்திலிருந்து ஏழுகல் தொலைவில் யாரும் எளிதில் அணுக முடியாத இடத்தில் அமைந்துள்ள சுண்டூர் குமாரசுவாமி கோவிலுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைக் கண்டு தரிசித்து வழிபட்டார் நம் சாது சுவாமிகள். அங்கு ஓராண்டு தங்கித் தவம்புரிந்தார்கள். அங்கு முருகப் பெருமான் அரச வடிவத்தோடுஎழுந்தருளியிருக்கின்ற படியால், அவ்வூரை ஆளும் அரசன் தன் அரசையும் அரசாங்க உடைமைகளையும் சுவாமிக்கே உரிமையாக்கிவிட்டுத், தான் குமாரசுவாமியின் தொண்டனாக இருந்து ஊழியம் செய்து அரசு செலுத்திவரும் இயல்புடையவன். பெண்கள் யாரும் அக்கோவிலுக்குச் செல்லக் கூடாதாம். பிரம்மச் சாரிகள் தான் அக்கோவிலில் பூசை செய்வார்களாம்.

அண்ணலின் திருவடி அரண்மனையிற்பட அரசன்விண்ணப்பம்

இத்தகைய தெய்வீகம் பொருந்திய இடத்தில் இருந்து பெருந்தவம் மெற்கொண்டிருந்த அருந்தவராகிய நம் சாது மாமுனிவரை அவ்வரசன் வந்து அடிபணிந்து வணங்கினான். அவன் மனதில் இவர்ஓர் அருளாளர் என்ற திண்ணிய எண்ணம் தோன்றியது. அன்றுமுதல் அவருக்கு வேண்டுவன வற்றைக் குறிப்பாலுணர்ந்து கொண்டு வந்து கொடுத்து அனுதினமும் வணங்கி வந்தான். அடிகளாரின் திருவடி தன் அரண்மனையிற்

பட வேண்டும் என ஆர்வமிக்கவனாய்ப் பலநாள் விண்ணப்பம் செய்து வேண்டினான். நம் சாதுமாமுனிவர்" ஆகட்டும்! வருவோம்! வருவோம்! " எனக் கூறிவந்தார்.

அறுகம்புல்லில் ஆறெழுத்தோதி அசுவத்தை அடக்கல்

ஒருநாள் அவ்வரசன் அடிகளாரிடம் வந்து வணங்கிக் கலங்கிநின்றான். அதனை அவன் முகக்குறிப்பால் உணர்ந்த அடிகளார்," என்ன?" என்ற குறிப்புத் தோன்ற அவனை நோக்கினார். "அரசனும்," சுவாமி நம் அரண்மனையில் உள்ள குதிரைகளில் "டில்லிமட்டம்" என்ற குதிரை ஒன்று யாருக்கும் அடங்காமல் மதம் கொண்டிருக்கிறது. அதில் சவாரி செய்ய முடியவில்லை ஜி என்றான். அடிகளாரும் நீ அவ்வாறென்றால் அதனை இங்கு கொண்டு வருக! ஜி என்றார்கள்.

அரசன் அரண்மனை திரும்பி நான்கைந்து மாமல்லர்களைக் கொண்டு கடிவாளம் முதலிய சேணங்களைப்பூட்டி வலுவந்தமாக அக்குதிரையை இழுத்துக்கொண்டு வந்து அடிகளார் முன் நிறுத்தினான். சேரமான் பெருமாள் நாயனார் திருவைந்தெழுத்தைக் குதிரையின் காதில் ஓதி அதன்மீது ஏறி விண்ணில் பறந்து, வெள்ளையானை மீது ஏறி கயிலைக்குச் செல்லும் சுந்தரமூர்த்திநாயனாருடன் திருக்கயிலாயத்தை அடைந்தது போல் பசுமையுடைய அறுகம்புல்லைக் கையில் எடுத்து, அதில் ஆறெழுத்து மந்திரத்தை ஓதி அக்குதிரைக்குக் கொடுத்தார்கள்.

குதிரையால் நிறைவேறிய கோவேந்தன் எண்ணம்

நம் சாது மாமுனிவர் அரசன் முதலானவர்களைப் பார்த்து "அனைவரும் எம்முடன் வாருங்கள்ஜி எனப் பணித்துவிட்டுப் பணியாமல் நின்ற அப்பரியின் மீது ஏறி அமர்ந்தார்கள். அடிகளார் அதன் மீது பரவி அமர்ந்ததும் அப்புரவி இடக்குப்பண்ணாமல் மிக்க அமைதியுடன் மெதுவாக அரண்மனை நோக்கிச்சென்றது. உடனே அரசன் வெகு வேகமாய் முன்னே போய் அரண்மனை வாயிலில் நின்று அடிகளாரைத் தக்க மரியாதைகளோடு எதிர்கொண்டழைத்து அரண்மனைக்குள் இட்டுச் சென்று அரியணையில் அமரச் செய்தான்.

திமிர் பிடித்த டில்லிமட்டக்குதிரையால் அவனுடைய நெடுநாளைய எண்ணம் நிறைவேறியது கண்டு இரும்பூது எய்தினான். தன்சுற்றத்தாருடன் தானும் அடிகளாரின் அடிபணிந்து வணங்கித்திருநீறு பெற்றுக்கொண்டான்.

கோரிக்கை செய்து பெற்ற காணிக்கை

அரசனது வேண்டுகோளுக்கு இணங்கிச் சிலநாள் அரண்மனையில் தங்கியிருந்து தவம்புரிந்து அவனுக்கு அருள்பாலித்தார் நம் சாது மாமுனிவர். ஒருநாள் அவ்வரசன் அடிகளாரிடம் வந்து பணிந்து நின்று அடிகள் பெருமானுக்கு விருப்பமானவற்றைக் காணிக்கையாகக் கொடுக்க விரும்புகிறேன் என்று சொன்னான்.

"அப்படியானால் அரசவடிவோடு இங்கு எழுந்தருளியுள்ள குமார சுவாமியின் திருவுருவை ஓவியமாக வரைந்துதரல்வேண்டும்" என்றார் அடிகளார். அரசனும் அவ்வாறே கைதேர்ந்த ஓவியரைக்கொண்டு நன்றாக வரையச் செய்வித்துக் கொண்டு வந்து அதனை அடிகளாரிடம் காணிக்கையாகச் செலுத்தினான். அதனைப்பெற்ற அடிகளார் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டார்.

குமாரசுவாமி படம் நிலைபெற்ற சரசுவதி விலாச நிலையம்

சுண்டூர் அரசனிடம் கோரிக்கை செய்து காணிக்கையாகப் பெற்ற குமார சுவாமியின் அந்தப் படம்தான் அடிகளாரின் மாணவரும் ஆச்சாள்புரம் திருவேங்கடம் பிள்ளையின் மகனாரும் ஆகிய வெங்கடேசம் பிள்ளையவர்களால் அடிகளாரின் தவத்திற்காகக் கொள்ளிடக்கரைக்கு அருகில் மிக அழகாக அமைக்கப்பெற்றுள்ள *சரசுவதி விலாச நிலையத்தில்* மந்திர பூர்வமாக எழுந்தருளச் செய்யப்பெற்றிருந்து, சாதுக்களால் நாள்தோறும் பூசை செய்விக்கப்பெற்று வந்த தென்றால் நம் சாதுமா முனிவர் சுண்டூர்க்குமார சுவாமியின் பால் வைத்த பேரன்பின் வலிமையைப் பேசவுங் கூடுமோ?

தற்போது அந்த அழகிய படம் சுவாமிகளின் சமாதி நிலையத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

திருப்பதிமலையில் ஒரு துறவி விருப்பொடு செய்த பணி

நம் சாது மாமுனிவர் திருப்பதி மலைக்குச் சென்றார். அங்கே எழுந்தருளியிருக்கும் வெங்கடேசப் பெருமாளைக் கண்களால் கண்டு வணங்கினார். அம்மலையின்மேல் ஈசானிய திசையில் உள்ள தீர்த்தத்தின் கீழ்ப்பாகத்தில் இருக்கும் சித்தர் குகையில் தங்கித் தவம் செய்து கொண்டிருந்த ஒரு மகாயோகியைக் கண்டு அளவளாவினார். அன்பு மிக்க அவருடன் அந்தக்குகையில் தங்கியிருந்து தவம்புரிந்தார்கள்.

அன்னையின் அன்புமிக்க அருளாளர் ஊட்டிய அன்னம்

அந்த மகாயோகி அறுசுவையோடு கூடிய எந்த உணவையும் உண்பதில்லை. பசிவந்தபோது பச்சை இலைகள், பழம், காய், கிழங்குகளில் கிடைத்த எதையாவது உண்டு, தண்ணீர் மட்டும் குடித்துப் பசியாற்றிக்கொள்பவர். அப்படிப்பட்ட அவர் நம் சாதுமாமுனிவருக்காக வெளியே சென்று பிச்சை எடுத்து வந்து உண்ணச் செய்வார். நம் அடிகள் பெருமான் சிலசமயம் யோக நித்திரையில் இருந்தாலும் தலையைத் தூக்கித் தன்மடிமீது வைத்து விழிப்புறச் செய்து அன்னையினுந் தயையுடையவராய் உணவினை ஊட்டிவிடுவார்கள். நம் அடிகளாரை அம் மகாயோகி தம்மினும் சிறந்த அருளாளராகக் கருதினார்கள் என்பது திண்ணமாய்த்தெரிகிறதல்லவா?

பரம்பொருளின் பரிபூரண பரமானந்தம்

அவ்வாறு அம்மகாயோகிகளால் உபசரிக்கப்பெற்று மாதவம் புரிந்து கொண்டிருந்த திருப்பதி மலையை விட்டுப்புறப்பட எண்ணினார் நம் அடிகளார். அந்த மகாயோகியிடம் விடைபெற்றுக் கொண்டு கீழிறங்கித் தெற்கு நோக்கி யாத்திரையாக வந்து கொண்டிருந்தார். பரம்பொருளின் பரிபூரண பரமானந்தத்தில் மூழ்கித் திளைத்தற்கு ஏதுவாகிய நிருவிகற்ப சமாதி நிலை கைகூடவில்லையே? அந்நிலையை எப்பெரியார் அருள்செய்வாரோ? என்ற ஏக்கம் ஒருநாள் சாதுசுவாமிகளின் நெஞ்சத்தில் ஏற்பட்டது. தலங்கள் தோறும் அவரைத் தேடிக்கொண்டே பயணம் மேற்கொண்டார்கள்.

ஒப்பற்ற குருவான உயர்மாதவ நந்தியடி சுவாமிகள்

அச்சமயத்தில் புதுவையைச் சார்ந்த நற்காற்றூருக்கு அடுத்துள்ள வெள்ளாளன் குப்பத்தில், ஏற்கெனவே திருப்பெருமண நல்லூரில், நம் சாது சுவாமிகளாகிய சபாபதிக்கு அருட்கண்நோக்கம் செய்து ஆட்கொண்ட உயர்மாதவ நந்தியடி சுவாமிகள் எழுந்தருளியிருப்பதாகக் கேள்விப்பட்டார்கள். நந்தியடிசுவாமிகள், சிவாநுபூதிச் செல்வர், சகல விதமான சாத்திரங்களையும் முற்றுமாகக் கற்றுத் தெளிந்தவர். ஓர் ஆசிரியருக்குரிய இலக்கணம் அனைத்தும் நிரம்பப்பெற்ற அப்பெரியாரை நம் சாது சுவாமிகள் வெள்ளாளன் குப்பத்திற் சென்று கண்டார்கள். கண்ட அக்கணமே அவர் உள்ளத்தில் ஓர் உணர்ச்சிப்பெருவெள்ளம் ஊற்றுப் பெருக்கெடுத்தது: உடம்பெல்லாம் மயிர் கூச்செறிந்தது. அன்பின் பெருக்கை அடக்க முடியாது இன்பக் கண்ணீர் வழிந்தது. பலநாள்களாகத் தாயைக் காணாதிருந்து கண்டசேய்போல் விக்கித்து நின்றார். பலகால் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றார்கள்.

செவியில் ஓதிய ஒருதனிச் செம்மொழி

நம் சாதுமாமுனிவரின் பரிபக்குவ நிலையையும் குறிக்கோளையும் பார்த்த கணத்தில் பகுத்துணர்ந்தார் பரம குருவான நந்தியடி சுவாமிகள். அவரை அன்புடன் அழைத்துச் சென்று தனியிடத்தில் அமரச்செய்தார்கள்.விதிப்படி தீக்கை செய்து வைத்தார்கள். அலைபாய்ந்து கொண்டிருந்த அவர் மனத்தைத் தம் அருள் நோக்கத்தால் அமைதியுறச் செய்தார்கள். பரந்த விடயம் தோன்றாமல் பரிபூரண பரமானந்தம் தோன்றுவதற்கு ஏதுவான ஒரு தனிச் செம்மொழியை அவர் செவியில் ஓதி அருள்பாலித்தார்கள்.

பெரும் பேறு பெற்றுப் பேரின்பத்தில் திளைத்தல்

அக்கணமே பரமகுரு நாதராகிய நந்தியடிகள் திருவருளால் நம் சாது மாமுனிவர் பெறற்கரிய பேறு பெற்று நிருவிகற்ப நிலையை அடைந்து பேரின்பப் பெருங்கடலில் மூழ்கித் திளைத்தார்கள். தன்னையும்

தனக்காதாரத் தலைவனையும், பிரிவற்ற சச்சிதானந்த அத்வைதப் பெரும்பொருளின் பரிபூரண வடிவினையும் ஐயந்திரிபற உணர்ந்து இன்பப்பெருக்காய் எழுந்த ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி விளங்கினார்கள்.

நிழல் போல் நீங்காதிருந்து நித்தம் பணிசெய்தல்

அன்றுமுதல் உயர்மாதவ நந்தியடி சுவாமிகளே தம் பரமசற்குரு என உறுதியை மேற்கொண்டார்கள். உடலில் மேவிய உயிர்போல் ஒரு கணமும் நீங்காது அவர் அருகிலேயே இருந்தார்கள். கண்ணை இமை காப்பதுபோல் அவர்தம் திருமேனியைப் பாதுகாத்தார்கள். நிழல்போல் ஒரு நொடியும் நீங்காதிருந்து அவருடைய குறிப்பறிந்து விருப்பமானவற்றைப் பொறுப்புடன் செய்து பூரித்திருந்தார்கள்.

செம்புத்தம்படியைச் செம்பொன்னாகச் செய்துகாட்டுதல்

அவ்வாறு இருந்து வரும்பொழுது திருநந்தியடிகளாருக்கு ரசவாதத்தால் செம்பைத் தங்கமாக மாற்றக்கூடிய ஆற்றல் இருப்பதை சாது சுவாமிகள் தெரிந்து கொண்டார்கள். இந்த வித்தையை அறிந்து கொள்ள விருப்பம் கொண்டிருந்தார்கள். அவரது ஆர்வத்தைக்குறிப்பால் உணர்ந்த நந்தியடிகளார் ஒருநாள்இருவரும் தனியாக ஓரிடத்தில் இருக்கும்போது," அப்பா சாது, அதோ அங்கே இருக்கிற செடியின் இலைகளைப்பறித்துக் கொண்டுவா?'' என்று கட்டளையிட்டார்கள். சாது சுவாமிகளும் தன் குருநாதர் ஆணைப்படி இலைகளைப் பறித்துக் கொண்டுவந்து கொடுத்தார். ஒரு கரித்துண்டைக் குடைந்து பள்ளமாக்கி அதனுள் அப்பச்சிலையைக் கசக்கிவைத்து அதன் நடுவில் ஒரு செப்புத்தம்படியை வைத்துப்பொதிந்து, அதன் மேலும் ஒரு கரித்துண்டைவைத்து மூடி, சிலை மண்செய்து பத்து எருவில் புடமிட்டு எடுத்து " சாது இதைப்பார்" என்றார்கள். அந்தச் செப்புத்தம்படி செம்பொன்னாகக் காணப்பட்டது. " இதுதானப்பா நீ விரும்பியது, இதே ஆகிவிட்டது இதனால் என்ன பயன்"."மூவேடனை விட்டு மும்மலம் அறுத்தவனுக்கு இதனால் என்ன பலன் கிடைக்கும்? இதனால் ஏதாவது புருடார்த்தம் உண்டாகுமா? மூவாசையும் அற்ற முனிவர்கள் இதனைத் தூசுக்குச் சமமாகக் கருதுவார்களேயன்றி

ஒருபோதும் இதனை ஒரு பொருளாய் மதிக்கமாட்டார்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

எனப் பெரிய புராணத் திருக் கூட்டச் சிறப்பில் சேக்கிழார் பெருமான் கூறியருளியிருப்பதை நீ படிக்கவில்லையா? ஜி என்றார். உடனே அடிகளார் தம் குருநாதரின் வல்லமை, வைராக்கியம் 'ஞானம், அமைதி ஆகிய நற்பண்புகளைக் கண்டு வியப்பும் அச்சமும் அடைந்தார்கள். நந்தியடிகள் பெருமான் மொழிந்த அந்த நன்மொழிகளைப் பொன்மொழிகளாக்கி உள்ளத்திற் பதித்துத் தம் வேட்கையை விட்டொழித்தார்கள்.

கனவில் காட்சி தந்து கட்டளையிட்ட பழனியாண்டவன்

இவ்வாறு உயர்மாதவ நந்தியடிகளாரும், சாது மாமுனிவரும் வெள்ளாளன் குப்பத்தில் இருந்து தவமியற்றி வந்தார்கள். ஒருநாள் நந்தியடிகளார் யோக நித்திரையில் இருந்தார்கள். அப்போது *பழனி தண்டாயுதபாணி* அவர்கனவில் தோன்றி *என் சாதுவை என்னிடம் அனுப்புவாயாக* என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார் தவநிலைகலைந்த நந்தியடிகளார், உடனே விழிப்புற்று எழுந்து வியப்புற்றார். சாது சுவாமிகளை அருகில் அழைத்து நீ அப்பா சாது உன்னால் பழனியில் பல தொண்டுகள் நிறைவேற வேண்டியுள்ளது போலத் தோன்றுகிறது. ஆகவே உம் பழனியப்பன் உம் மேல் விருப்பங் கொண்டு பழனியம்பதிக்குத் தன்னிடம் அனுப்பிவைக்கும்படி கனவில் தோன்றிக் கட்டளையிட்டுள்ளான். அவன் திருவிளையாடல்தான் என்னே! ஆதலால் நீர் இன்றே பழனிக்குப் பயணம் புறப்படுவீராக எனக் கட்டளையிட்டருளினார்.

அருந்தவம் புரிந்த பெருந்தவச் சாது

நந்தியடிகளாரின் கட்டளையைக் கேட்டுத்திடுக்கிட்டு வியப்பெய்தினார். பழனியாண்டவன் நம்மீது இவ்வளவு கருணை கொண்டுள்ளானா?

புளகாங்கிதம் அடைந்தார். ஆசானாகிய நந்தியடிகளாரின் அருளாணையைத் தலைமேற்கொண்டு ஆசிரியரைவிட்டுப்பிரிதற்கு அகம்மிக வருந்தி அன்புநீர் கண்களில் ஆறாகப்பெருக, அவரது அடிகளில் வீழ்ந்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு விரைந்து பழனியை நோக்கிப்பயணமானார்கள்.

ஆன்கன்று ஒன்று அரும்பசிவந்து அடுத்தபோது பால் அருந்திப் பசியாற வேண்டித்தாய்ப் பசுவை நோக்கித் துள்ளிக் குதித்துத் தொடர்ந்து ஓடுவது போல் மிக்க வேகமுடன் மிகுந்த தாகமும் கொண்டு மிக விரைவாகப் பழனியம்பதியை அடைந்தார்கள். தம் தலைவனாகிய தண்டாயுதபாணியைக் கண்டு தாள்பணிந்து வணங்கினார்கள். தன்பால் வைத்த தனிப்பெருங்கருணைத் தயவினை எண்ணித் தலைதாழ்த்தி மனம் மகிழ்ந்தார்கள். இவ்வாறு நாள்தோறும் வழிபாடியற்றினார்கள். திரு ஆவினன் குடி ஆலயத்திலும், ஒற்றைக்கால் மண்டபத்திலும் சில ஆண்டுகளும், மலைக்குத் தெற்கில் உள்ள குகையாகிய ஆதியாச்சிராமத்தில் சில ஆண்டுகளும் இருந்து அருந்தவம்புரிந்தார்கள் நம் பெருந்தவச் சாது சுவாமிகள்.

கடன்வாங்கிக் கடும்பசியாற்றிய கருணைவள்ளல்

சாதுமாமுனிவர் இவ்வாறு தவ வழிபாடியற்றிக் கொண்டிருக்கும் தருணத்தில், அங்கு வந்த அடியார்கள் ஏழை, மொண்டி, முடம், கூன், குருடு ஆகியவர்கள் பசியால் மிக வாடி நிற்பதைக்கண்டு மிக்க வருத்தம் கொண்டு மனம் உருகினார்கள். அங்கிருக்கும் சிற்றுண்டிக் கடைக்காரர்களிடமும், உணவுவிடுதிக்காரர்களிடமும் வேண்டி, கடனாகப்பெற்று பசியால் வாடும் அனைவருக்கும் கொடுத்து அவர்கள் ஆர்வமுடன் அருந்திப்பசியாறுவது கண்டு அகம்மிகமகிழ்வார்கள்.

உயர்ந்த கடனும்: உயர்ந்த மனமும்

நம் சாது சுவாமிகள், தாமாகக் கொண்டு வந்து காசு கொடுத்தால் அல்லது கடைக்காரர்கள் எவ்வளவு

பாக்கியிருந்தாலும் அவரிடம் சென்று கேட்கமாட்டார்கள். மேலும், மேலும் சுவாமிகள் கட்டளைப்படி கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு கடைக்காரரிடத்திலும் ஆயிரக்கணக்கில் கடன் உயர்ந்து விடுமானால் சுவாமிகள் மனம் வருந்துவார். உடனே நீ முருகா உன் மக்களுக்கு உற்றபசிப்பிணியைத் தணிப்பதற்காக ஏற்பட்ட கடனை நீயல்லாது வேறு யார் கொடுப்பார்? ஆகவே நீதான் கொடுக்க வேண்டும். என்று மனதார வேண்டுவார். அன்றைய தினமே யாராவது ஒரு செல்வந்தர் வந்து அடிகளாரை வணங்கி ஐயா தங்கள் திருவுளப்படி இதுவரையில் கடைகளில் நிற்கும் கடன்கள் அனைத்தையும் யானே கொடுத்து விடுகிறேன்.! ஜி எனக்கூறிக் கடைக்காரர்களைக் கூப்பிட்டு பாக்கி நிற்கும் தொகை முழுவதையும் கொடுத்து விடுவார்கள். மேலும் "இனியும் இதற்காக எவ்வளவு கடன் ஏற்பட்டாலும் அடியேன் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்.'' எனச்சொல்லி விடைபெற்றுச் செல்வார்கள்.

உலகுக்கு உபகாரம் ஞானிகள் விவகாரம்

நம் சாது சுவாமிகள் துறந்தபற்றற்ற ஞானி. அவரது இரக்கம் நிறைந்த இதயத்தில் கருணை வெள்ளம் பொங்கித் ததும்பியது. ககனத்திலிருந்து கார்மேகம் பெய்யும் மாரி கழனியில் மட்டுமா பொழிகிறது? கானகக் காட்டிலும் கடலிலும் பெய்கிறது! கரடு முரடான மலைகளிலும் கற்பகப் பூஞ்சோலைகளிலும் கொட்டுகிறது. பாலை வனத்திலும், பயிர்கள் விளையும் பூமியிலும் பாய்கிறது : அதேபோல் சாது சுவாமிகளின் அன்பு நெஞ்சத்தில் கவிந்திருக்கும் கருணை மேகம் அவரிவர் என்னாது அனைவருக்கும் அருள் மாரி பொழிந்து அரவணைத்தது. கைப்பிச்சை ஏற்று அருந்திவரும் அவர் கைமாறு கருதாமல் அனைவருக்கும் பசிப்பிணி போக்கி தாம் ஆற்றிவரும் அப்பணி எந்நிலையிலும் இடையூறு இன்றி நடைபெற வேண்டும். எனப் பழனியாண்டவனை மனம் உருக வேண்டினார். இதிலிருந்து ஞானிகள் செய்யும் எப்பணியும். உலகமக்களுக்கு எப்போதும் உறுதுணையாக நிற்கும் (ஞானிகள் விவகாரம் உலகுக்கு உபகாரம்) என்பது வெள்ளிடைமலையாக விளங்குகிறது அல்லவா?

உறுபொருளாக முதலில் கிடைத்த ஒன்பதுபடி அரிசியும் உப்பும்

இவர்கள் இவ்வாறு பணியாற்றிக் கொண்டிருக்கும் போது ஒருநாள் உலகெல்லாம் உவந்து புரந்து காக்கும் உமையம்மையோ என எண்ணும்படியான தோற்றத்தோடு ஓர் அம்மையார் சாது சுவாமிகள் முன் வந்து நின்று வணங்கினார்கள். பின் அவரை நோக்கி " அடிகள் பெருமானே! இன்று தாங்கள் எங்கள் வீட்டிற்கு எழுந்தருளி உணவு கொள்ள வரவேண்டும் என உவந்து அழைத்தார்கள். அதற்கு நம் சுவாமிகள், அம்மையே! இங்கு என் போன்ற எத்தனையோ அடியார்களும் ஏழைகளும் பசிக்கொடுமை தாங்காது பரிதவிக்கும்போது, நாம் மட்டிலும் உங்கள் வீட்டிற்குவந்து அறுசுவை உணவுண்டுவருவது தகுமா? யான் எப்பொழுதும் இலைபோட்டு உண்பதில்லை! கைப்பிச்சை வாங்கி உண்பவன்! ஆகையால் இன்றும் எப்போதும் போல் பிச்சையே வாங்கி அருந்துகிறேன்" என்று கூறினார்கள்.

அதுகேட்ட அந்த அம்மையார்," அவ்வாறாயின் நான் அரிசி கொண்டு வந்து தருகிறேன்! சமையல்செய்து எல்லோரும் சாப்பிடுங்கள்!" என்றார்கள். அதற்கு அடிகளார் சம்மதப்பட்டார்கள். உடன் அந்த அம்மையார் ஒன்பதுபடி அரிசியும் உப்பும் கொண்டுவந்து கொடுத்தார்கள். இதுதான் நம் சாது சுவாமிகள் அடியார்களின் அன்னம் பாலிப்புக்காக *முதன்முதலாகப் பெற்றுக் கொண்ட உறுமுதல் ஆகும்.*

மண்பாண்டம் - புளி - மிளகாய் - மலையோர விறகு

அரிசியையும் உப்பையும் அன்போடு பெற்றுக்கொண்ட அடிகளார் அதனை (இப்போது பெரியபெரிய அண்டாக்களையும் உருளிகளையும் வைத்து ஆயிரக்கணக்கான அடியவர்களுக்கு அனுதினமும் சமையல்செய்யும்) புளியமரத்தடிக்குக் கொண்டுவந்தார்கள். அப்போது அடிகளாரின் மாணவர் ஒருவர் " நான் எட்டணா வைத்திருக்கிறேன். அதற்கு மண்பாண்டங்கள் வாங்கி வருகிறேன்" என அடிகளாரிடம் உத்தரவு கேட்டார். அவரும், சரி! செய் என்றார்கள். மற்றொருவர், என்னிடம் கொஞ்சம் சில்லறை இருக்கிறது. அதற்குப் புளி, மிளகாய் வாங்கி வருகிறேன் எனக் கூறிச் சென்று வாங்கி வந்தார்கள். இவை வந்து சேர்வதற்குள் ஏனைய அடியார்கள் மலையோரங்களில் சென்று விறகு பொறுக்கி வந்தார்கள்.

காரத்துவையலும் கஞ்சியும் அருந்திக் களிப்படைதல்

அந்தப் புளிய மரத்தடியில் எல்லோரும் ஒன்று சேர்ந்தனர். கற்களை எடுத்துவைத்து அடுப்புக்கூட்டினர். மூன்று கற்களால் ஆன அந்த அடுப்பில் அவர்கள் அன்று மூட்டிய நெருப்பு இன்றும் கனன்று கொண்டிருக்கிறது மண்பாண்டங்களை அடுப்பில் வைத்து உலைநீர் பெய்தனர். உலைகாய்ந்ததும் அதில் அந்த ஒன்பதுபடி அரிசியைப்போட்டுக் கஞ்சி காய்ச்சி இறக்கினர். மிளகாய், புளி, உப்பு மூன்றையும் சேர்த்து ஒரு காரத் துவையலாக அரைத்து எடுத்து வைத்துக் கொண்டனர். சுமார் நாற்பது ஐம்பதுபேர்கள் நம் சாது சுவாமிகள் உடனிருந்து துவையலைத் தொட்டுக்கொண்டு கஞ்சியை அருந்திக் களிப்படைந்தார்கள்.

அஞ்சாதிரு அனைத்தும் நடைபெறும் என்ற அருட்பரை

அன்றிரவு அடிகளார் துகில் கொள்ளச் சென்றார். இன்று சில அடியார்களுடன்இருந்து உணவருந்தினோம். நாளை உணவுக்கு அவர்களை எங்கே போகச் சொல்வது? என்ற சிந்தனையோடு அறிதுயிலில் ஆழ்ந்திருந்தார்கள். திருவாவினன்குடிக் காளியம்மை - கொற்றவை-அடிகளார் மனக்கண் முன் தோன்றி, " அப்பா சாது! நீ எதற்காகக் கவலைப்படுகிறாய்? உன் எண்ணங்களையெல்லாம் ஈடேற்றி வைக்க நானிருக்கிறேன் இரக்கம் மிக்கவர்களின் இனிய துணையால் நீ எதிர்பார்க்கப்படும் அனைத்தும் இடையூறின்றி எளிதாக நடைபெறும். அஞ்சாதே! தைரியமாக இரு எனக்கூறி மறைந்தனள். உடனே நம் சாது மாமுனிவர் விழிப்புற்று வியப்புற்றார். தேவியின் திருவருளை எண்ணியெண்ணிக் கண்ணீர் மல்கிக் கசிந்துருகி நின்றார்கள். அதன் பின் அன்றிரவு முழுவதும் அம்பிகையின் கருணைவெள்ளக்கடலில் மூழ்கித் திளைத்து முக்குளித்தார்கள்.

முப்பழம், அப்பளம், வடை, தீம் பாலமுதம்

அப்போது முதல் பழனியாண்டவரை வழிபடவரும் அன்பர்களில் யாரெனும் ஒரு மெய்யன்பர் தாமாக முன்வந்து வணங்கி " சுவாமி அடியேன் இன்று ஒரு மூட்டை அரிசியும், அதற்கு வேண்டிய மளிகைப் பொருள்களையும் வாங்கித் தருகிறேன். தாங்கள் அதனைத் தக்கபடி பக்குவம் செய்து அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும்

உணவளியுங்கள்! என சுவாமிகளிடம் வேண்டிக் கொள்வார்கள். அது அப்போதே அவர்கள் விரும்பியவாறு சமைத்து வழங்கப்படும்.

அவ்வன்னதானமானது இவ்வாறு நாள்தோறும் பெருகி

" பல்லாறு இயன்ற வளம்பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்
எல்லாம் எய்தி உண்க"

-என்ற தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமானின் வாக்கிற்கு ஏற்பத் தொடர்ந்து நடந்து வந்தது. நாளடைவில் நன்கொடை தரும் அன்பர்களின் எண்ணிக்கை வியத்தகு அளவில் உயர்ந்தது. அனைவருக்கும் முப்பழம், அப்பளம், வடை தீம்பாலமுதம் (பால்பாயசம்) முதலியவற்றோடு பெருவிருந்து அளிக்கப்பட்டது.

சண்முக விலாச அன்னதான நிலையம்

நாளடைவில் திருக்கோயில் இராக்காலக் கட்டளை மடத்தில் எழுநூறுக்கும் அதிகமானவர்கள் அமர்ந்து உணவு அருந்தும்படியான கட்டடம் கட்டி, அதற்கு சண்முக விலாச அன்னதான நிலையம் எனப்பெயரும் வைத்தனர். அதில் அக்கினிக்கழிவு, விசாக நன்னாள், ஆடிக்கிருத்திகை மற்றும் மாதக்கிருத்திகைகள், கந்தர் சஷ்டி, பங்குனி உத்திரம் ஆகிய திருவிழா நாட்களில் பலவகையான காய்கறி, கூட்டு வகைகளுடன் பலமான விருந்து படைக்கப்பட்டது.

ஆறாண்டுகள் செய்த பேரமுத நீராட்டு

பழனியாண்டவனுக்கு இதற்கு முன்னும் இதுவரையும் எப்பேர்ப்பட்ட மன்னர் மன்னரும் செய்யாத அளவில் சாது மாமுனிவர் பேரமுத நீராட்டுச் (மகா அபிசேகம்) செய்வித்தார். பால், தயிர், நெய், தேன், இளநீர் முதலான அமுது நீராட்டுப் பொருள்கள் ஒவ்வொரு வகைக்கும் நூற்றெட்டுக் குடங்கள் எண்ணி எண்ணிக் கொடுத்து

மிகப்பெரிய பேரமுத நீராட்டுப்பெருவிழாவைத் தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் செய்தார். அந்த நாளில் மலை உச்சியில் இருந்து அடிவாரம் வரை பாலும், தேனும், பஞ்சாமிர்தமும் அருவிபோல் வழிந்தோடிய காட்சியைக் கண்களாற் கண்டு களிபேருவை கொள்ளாதவர் இந்தத் தண்டமிழ் நாட்டில் இலராவர்.

ஆறுபடை வீடுகளும் ஆறுமுகன்கோயில்களும்

இதே போல் முருகன் எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகளில் முதலாவது படைவீடான தெய்வயானையைத் திருமணம் கொண்ட திருப்பரங்குன்றம், இரண்டாவது படைவீடான திருச்சீரலைவாய் எனப்பெறும் சூரனின் ஆணவமலம் அறுத்த திருச்செந்தூர், மூன்றாவது படைவீடாகிய திருவாவினன் குடிஎனும் பழனி, பிரணவமாகிய ஓங்காரத்தின் உட்பொருளை பரம்பொருளாகிய பரமசிவனுக்கு எடுத்தோதிய நான்காவது படைவீடாகிய ஏரகப்பதி எனும் சுவாமிமலை, ஐந்தாவது படைவீடாகிய குன்றுதோறாடல் தலங்களில் சிறந்து விளங்கும் திருத்தணி, கொங்குநாட்டுத்தலமான மருதமலை, மந்தமாருதம் வீசும் சோலை சூழ்ந்து விளங்குவதால் மயில்கள் எப்போதும் தோகை விரித்தாடும் விராலிமலை, ஆறாவது படைவீடாகிய அள்ள அள்ளக் குறையாது வெள்ளம் ஊற்றெடுக்கும் நூபுர கங்கைச்சுனைகொண்ட பழமுதிர்சோலை ஆக ஆறுபடை வீடுகளிலும் இப்படிப்பேரமுத நீராட்டுச் செய்து மனமகிழ்ச்சி கொண்டார்கள்.

இதுவன்றி பழனி தண்டாயுதபாணிக்குக் காலை சந்தி முதல் அர்த்த சாமம் வரை செய்யும் கால வழிபாடுகளுக்குப் படித்தரங்கள் ஏற்படுத்தினார்கள். இவை இன்றும் இம்மடத்திலிருந்து செய்யப்பெற்று வருகின்றன.

மட்டில்லா மலர்களால் அலங்கரித்த சட்டித் திருவிழா

அத்தோடு அடிகளார் மனம் நிறைவு பெறவில்லை. திருவிழா நாட்களில் சிறப்பு அலங்காரம் செய்வித்தார்கள். இதுநாள் வரை எவரும் செய்யாத காட்சியாக நூற்றுக்கணக்கான கூடைகளில் பலவகையான மணம்வீசும் மலர்களை புகைவண்டி மூலமாக பல ஊர்களிலிருந்தும்

கொண்டு வரச்செய்து அடியார்களைக் கொண்டு இரவுபகலாக இருந்து விதவிதமான மலர்மாலைகளாகத் தொடுக்கும்படி செய்து எடுத்துக் கொண்டுபோய் பழனியாண்டவனைப் பலவிதமாக அலங்கரித்து பல்வேறு திருக்கோலங்களில் விளங்கச்செய்து அன்பர்களோடு கூடியிருந்து கண்டுகளித்தார் நம் சாதுமாமுனிவர்.

பரம குருநாதர் நந்தியடிகளார் பழனிக்கு எழுந்தருளல்

சாது சுவாமிகள் பழனியம்பதியில் பெருந்தவம் இருந்து பேரறம் செய்து கொண்டிருந்தார், பழனியாண்டவருக்கு அமுத நீராட்டும் ஆறுகால வழிபாடு போன்ற சிறப்புக்களையும் செம்மையுறச் செய்து கொண்டிருந்தார். இவர் இவ்வாறு இறைபணிசெய்தும் ஏழைகளுக்கு உணவளித்தும் தவம் இயற்றிக்கொண்டிருக்கும் நாளில் இவருடைய குருநாதராகிய நந்தியடிகளார், தமக்கென ஓரிடம் அமைத்துத் தங்கியிராமல் திருக்கழுக்குன்றம், சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி, திருச்செந்தூர், குற்றாலம், பாபவிநாசம், முதலான திருத்தலங்களுக்குச் சென்றுவழிபாடு செய்தவாறு இருந்தார்கள்.

நந்தியடிகளார் ஆங்காங்குள்ள அடியார்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கி அவ்விடங்களில் சிற்சில நாள் தங்கியிருந்து விடைபெற்றுக்கொண்டு பழனியம்பதிக்கு எழுந்தருளினார்கள். தம் குருநாதரின் வருகையை அறிந்த சாது சுவாமிகள் அவரை எதிர்சென்று வணங்கி அடிபணிந்து அழைத்துவந்து குருநாதர் இருப்பதற்கு கிருட்டிணசாமி பண்டாரத்தையா மடத்தை ஏற்பாடு செய்து அங்கு எழுந்தருளச் செய்து அவர் குறிப்பறிந்து வேண்டுவன செய்து குறை எதுவும் இல்லாது தொண்டு செய்து வந்தார்கள்.

நம் சாதுமாமுனிவர் நயத்தலும், நந்தியடிகளார் வியத்தலும்

தம் குருவாகிய உயர்மாதவ நந்தியடிசுவாமிகளின் திருவருள் விலாசத்தையும் பெருகுறும் ஞானத்தவத்தையும் கண்டு அவருடைய திருவடிகளுக்குத் தொண்டு செய்வதைப் பெருமையாகக் கொண்டு, அவரைப் பேணிப்பாதுகாத்து வந்தார்கள். நந்தியடிசுவாமிகள் தன் மாணவருடைய

குருபக்தியையும்,அவர் பழனியம்பதியிற் செய்துவரும் அரும்பெரும் தொண்டுகளையும் அன்னதானங்களையும், மற்றைய அறப்பணிகளையும் கண்டு மனம் களித்தார்கள். சாது சுவாமிகளின் அருந்தவத்தினையும் பெருங்குறிக்கோளையும், தம் கண்ணாறக் கண்டு மனதார மகிழ்ந்து வியந்தார்கள். பின்னர் அவருடைய பணிகளும் குறிக்கோளும் இனிதே நிறைவேற, மேலும் மேலும் திருவருட்செல்வமும், பொருட்செல்வமும் பெருகும்படி அருள்புரிந்து பிரபவ ஆண்டு தைத்திங்களில் (1927 - சனவரி மாதத்தில்) பழனியம்பதியை விட்டுப்புறப்பட்டுச் சென்றார்கள்.

பெருவளநல்லூரில் குருபரர் சமாதி அடைதல்

உயர்மாதவ நந்தியடிகளார் பழனியம்பதியை விட்டுப்புறப்பட்டு வடக்கு நோக்கிச் சென்றார்கள். திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள திருத்தவத்துறையை (இலால்குடியை) அடுத்திருக்கிற பெருவள நல்லூர் என்னும் பெரும்பதியை அடைந்தார்கள். அங்கு தம் பரமபக்தரான திரு கிருட்டிணரெட்டியார் என்பவர்தம் திருமனையில் சிலநாள் தங்கினார்கள். நல்லறம் புரிந்து வந்த கிருட்டிணரெட்டியார் அவர்தம் இல்லக்கிழத்தியார் மற்றும் அங்குள்ள அன்படியார் ஆகியோருக்கு அருள் பாலித்திருந்தார்கள். விபவ ஆண்டு மாசித்திங்கள் பதின்மூன்றாம் நாள் 25-2-1928 அசுவினி நட்சத்திரம் கூடிய பரிபூரண ஒழிவில் ஒடுக்கச் சமாதி நிலையடைந்தார்கள். பண்ணையாரவர்கள் தமது புஞ்சை நிலத்தின் ஒரு பகுதியில் அத்திருமேனிக்குத் தக்கமரியாதைகள் செய்து சமாதியில் வைத்தார்கள்.

சாதுமா முனிவருக்குத் தகவல் அறிவித்தல்

பத்தாம் நாள் முத்திவழிபாட்டை அவர்தம் மாணவரைக் கொண்டு சிறப்பாக நடத்திவைக்க வேண்டும் எனப் பண்ணையார் எண்ணினார்கள். அந்தச் சமயத்தில் அங்கு வந்திருந்த நந்தியடிகளாரின் மாணவர்களில் ஒருவாரகிய சென்னை, சிந்தாதிரிப்பேட்டை சாமிநாயக்கன் தெருவில் உள்ள

காவல்த் துறைக் கண்காணிப்பாளர் திரு.தேவராச முதலியார் அவர்கள் மூலம் சாதுமாமுனிவர்தான் நந்தியடிகளாரின் முதன்மை மாணவர் என்பதனையும் அருமை பெருமைகளையும் பழனியம்பதியில் அவர் இருப்பதையும் அறிந்து கொண்டார்கள். "தங்கள் குருநாதராகிய உயர்மாதவ நந்தியடிகள் பெருமானார் இங்கு அடக்கமாகி விட்டார்கள். தாங்கள் வந்திருந்து பத்தாம் நாள் முத்திவழிபாட்டினைத் தக்கவாறு சிறப்பாகச் செய்து வைக்க வேண்டும்".எனக் கடிதம் எழுதி அனுப்பினார்கள்.

தாயைப் பிரிந்த சேய்போல் வருந்தல்

அக்கடிதம் கண்ட சாதுமாமுனிவர், குருநாதரின் பிரிவை நினைத்து, தாயைப்பிரிந்த சேய்போல் மனம் மிக வருந்தினார்கள். பின்னர் எல்லாம் பழனியாண்டவன் செயல் என ஆறுதல் அடைந்தார். தம் குருநாதரின் பத்தாம் நாள் வழிபாட்டிற்கு வேண்டுவன எல்லாம் எடுத்துக்கொண்டு பல செல்வந்தர்களும் அடியார் திருக்கூட்டமும் சூழப்புறப்பட்டுப் பெருவளநல்லூரை அடைந்தார்கள். சாதுமாமுனிவரின் வரவு கண்ட, பண்ணையாரும் அவர்தம் பத்தினியாரும் அவரை வணங்கி வரவேற்று அகம் மிக மகிழ்ந்தார்கள். தங்கள் வரவுக்காகவே எதிர்பார்த்திருந்தோம். இனித்தாங்கள் கட்டளைப்படி எல்லாம் சிறப்பாகச் செய்து முடிக்கச் சித்தமாக இருக்கிறோம் என்று பணிந்து சொன்னார்கள். சாதுமாமுனிவரும் எல்லாச் செயல்களிலும் திரு.கிருட்டிண ரெட்டியாரை முதன்மையாக வைத்துக் கொண்டு பத்தாம் நாள் முத்திவழிபாட்டைச் சிறப்பாகச் செய்து முடித்தார்கள்.

வெள்ளிக்குவளையால் நெய்யை அள்ளி அள்ளி வார்த்தல்

பின்னர் தம் குருநாதரின் சமாதியைக் கோவிலாகக் கட்டுவித்து அதில் குருநாதரை நந்தியம்பெருமான் வடிவில் எழுந்தருளச்செய்து அருகில் நந்தியடிகள் ஆசிரமம் ஒன்றினையும் கட்டுவித்தார்கள். அதில் தம் மாணவர்களாகிய அடியார்களை அதில் இருக்கும்படி பணித்தார்கள். அவர்களைக் கொண்டு நந்தியம்பெருமானுக்கு நாள்வழிபாடு முதலியன குறைவின்றி நடத்துவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆண்டு தோறும் மாசி மாதம் அசுவினி நாளில் பெருவளநல்லூருக்குத் தவறாது வந்திருந்து

திரு.கிருட்டிணரெட்டியாரை முதன்மையாக வைத்துக்கொண்டு குருவழிபாட்டினைச் சிறப்பாகச் செய்தார்கள். நந்தியம் பெருமானுக்கு அமுதநீராட்டி. பலவகை நன்மலர்களால் அலங்காரம் செய்து தூப, தீப, நைவேத்தியங்களுடன் அன்னம்பாலிப்பும் சிறப்பாகச்செய்தார்கள். அங்கு வரும் அடியார்களையெல்லாம் ஒருவாரம் வரையில் இருக்கச்செய்து, அவர்கள் உண்ணும்போதெல்லாம், வெள்ளிக்குவளையால் நெய்யை அள்ளி அள்ளிக் கைநிறைய வார்த்து உண்ணச்செய்தார்கள். அதுமட்டுமல்ல அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டிரண்டு வேட்டிகளுடன் தகுதிக்குத் தக்கவாறு வழிச்செலவுக்குப் பணமும் கொடுத்து மனநிறைவோடு அவர்களை அனுப்பிவைப்பார்கள். இந்த வைபவத்தை நூற்றுக்கணக்கான துறவிகள் ஆண்டு தோறும் வந்திருந்து கண்டுகளித்து உண்டுதிளைத்துக் கொண்டு சென்றனர். இவ்வாறு பல ஆண்டுகள் பெருவளநல்லூருக்கு வந்து குருவழிபாட்டைச் சிறப்பாக நடத்தி பண்ணையாரின் உபசரிப்பில் மனம் மகிழ்ந்து சில நாள் தங்கியிருந்து பின் விடைபெற்றுப் பழனியம்பதிக்குத் திரும்புவார்கள்.

தெய்வத்திருப்பணிகளும் சிவ வேள்விகளும்

சாதுமா முனிவர் தன் தவ வலிமையால் பழனியம்பதியிலும், பிற இடங்களிலும நம் சமய வளர்ச்சிக்காகப் பலவகையான சமயத்தொண்டுகளும், தெய்வத்திருப்பணிகளும், சிவவேள்விகளும் செய்துள்ளார்கள். அவைகளிற் சிறப்பான சிலவற்றை இங்கு எடுத்துக் கூறுவாம். சிவகங்கையை அடுத்துள்ள காளையார் மங்கலம் ***திருமிகு வீரப்பன் அம்பலகாரர்*** அவர்களைக் கொண்டு அவருடைய பெரும் பொருட்செலவில் பழனிமலையின் மேற்குக்கிரிவீதியின் தென் பக்கத்தில் மிக அழகிய ***நந்தியடிகள் ஆசிரமத்தைக்*** கட்டுவித்தார்கள். இங்கே சாதுமா முனிவரின் மாணவர்களும் அடியார்களும் தங்கியிருந்து இறைபணியும் இயமநியமாதி தவப்பணியும் செய்து வந்தார்கள். இக்கட்டிடம் செட்டிநாட்டுப்பாணியில் கட்டப்பெற்று, மிக அழகிய வேலைப்பாடுகளுடன் கதவு நிலவு நிலைப்படிகளும் கொண்டு வழவழப்பான காரைப்பூச்சுடன் இன்றும் பேணிப்பாதுகாக்கப் பெற்று வருகிறது.

அறச்சாலைகளும் அருந்தவச்சாலைகளும்

பழனிக்குத் திருத்தலப்பயணமாக வருகின்ற இல்லறத்தார் தங்குவதற்காக மலைக்கு வடமேற்கில் அருட்சோதி வீதியில் மாபெரும் நந்தியடிகள் நிலையத்தையும் மேற்படி வீரப்பன் அம்பலகாரர் அவர்களைக் கொண்டே 1941-ல் கட்டுவித்தார்கள். அவ்விடம் அன்பர்கள் தங்குவதற்கும் தக்கதொரு இடமாக விளங்கிவந்தது. தற்போது தமிழ்மீது அளவில்லாப் பற்று கொண்ட சாது சண்முக அடிகளார் அவர்க்ள் சமுதாயப் பணியோடு கல்விப் பணியில் முதற்படியாகத் தவத்திரு சாது சுவாமிகள் தாய்த்தமிழ்ப்பள்ளி என்னும் தமிழ்வழிக் கல்வியுள்ள.அரும்பு முதலாக தொடங்கி அடியெடுத்து வைத்துள்ளார்கள். இக்கல்வி நிறுவனம் குழந்தைகளுக்கு நற்பண்பும், மனிதநேயமும், அறிவியல் சார்ந்த முறையையும், இறைபக்தியையும் புகட்டப்பட்டு குழந்தைகளை நல்வழிப்படுத்தும் நோக்கோடு நடைபெற்று வருகிறது. இஃது ஆல்போல் தழைத்து அருகுபோல் வேறூன்றும் என்பதில் ஐயமில்லை.

சண்முக விலாச அன்னதான நிலையத்தின் ஈசான்ய மூலையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணிக்கடவுளின் கால வழிபாடுகளில் பயன்படுத்துவதற்காக சந்தனம் அறைக்கவும், தினைமா இடிக்கவும், பரிவட்டங்களைத் தூய்மைசெய்து பக்குவப்படுத்தவும் கட்டிடமும் வழிபாட்டு அறையும் அமைத்துள்ளார்கள். அவையும் தற்போது மேற்படி காரியங்களுக்குப் பயன்படுத்தப்பெற்றுவருகின்றன.

இவைதவிரவும் வரத்தாற்றுக்கு அருகில் சற்றேறக்குறைய நாற்பது ஏக்கர் நிலத்தை வாங்கி அவ்விடத்தில் சொர்க்காசிரமம் எனப்பெயரிட்டு அதனுள் தாயுமானார் ஆசிரமம் பசுமடம் முதலியவைகளும் நான்குமுக கொற்றவைக்கு ஒருகோயிலும் அமைத்து வைத்தார்கள். கொற்றவை கோயிலும் நிலமும் திருமடத்தின் நேரடிக்கட்டுப்பாட்டில் நாள்வழிபாடுகளுடன் பேணிப்பாதுகாக்கப்பெற்று வருகிறது.

பிள்ளையார் கோயில்கள், வெற்றி வடிவேல்கள்

கொங்கு நாட்டிலும், ஏனைய இடங்களிலும் பல பிள்ளையார் கோயில்களைக் கட்டுவித்தும் அவற்றில், பிள்ளையார் திருவுருவச்சிலைகளை நிறுவியும் மேலும் பல இடங்களில் வெற்றி வேலாயுதத்தையும் சிவசூலம் முதலானவற்றை நிறுவியும் அன்பர்கள் வழிபாடு செய்து உவந்துய்யுமாறு செய்துள்ளார்கள்.

கொற்றவை கோயில்கள்

கண்டவர் கண்களையும் மனத்தையும் கவர்ந்து தன்வயப்படுத்தும்படி சிறந்த சிற்பிகளைக் கொண்டு அழகிய கொற்றவை உருவங்கள் நான்கினையும் காளி முதலான தெய்வத்திருவுருவங்களையும், தம் அன்பர் ஈரோடு திருமிகு வி.வி.சி.ஆர்.முருசேக முதலியார் அவர்களின் பொருளுதவி கொண்டு செய்வித்தார்கள். அவற்றைப் பழனிமலையைச் சுற்றிலும் கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலுமாக மூன்று கோயில்களைக்கட்டி அவற்றில் மேற்படிக்கொற்றவைகளை எழுந்தருளச் செய்தார்கள். வடக்கில் ஏற்கனவே கொற்றவை இருப்பதால் மீதமான ஒன்றை நாம் முன்னரே சொல்லியபடி சொர்க்காசிரமத்தில் கோயில் கட்டி நிறுவினார்கள்.

மருதமலை மேவும் முருகன் திருமேனி

கொங்கு நாட்டுத் திருத்தலங்களில் சிறந்ததும், ஐந்தாவது படைவீடான குன்று தோறாடல் தலங்களில் ஒன்றானதும் ஆகிய மருதமலையில், தற்போது கருவறையில் வைத்து வழிபடப் பெற்று வரும் திருவுருவச் சிலையை நிறுவியவர் உயர்திரு மாதவச் சாதுமாமுனிவரே யாவார்.

கருங்கல் தவிசுகளும் கான்கிரீட் மண்டபங்களும்

இவைகளன்றித், தம்மைக் காணவரும் செல்வந்தர்களிடமும், மெய்யன்பர்களிடமும் அன்புக் கட்டளையிட்டு, மலையடிவாரத்திலிருந்து மலையுச்சிவரையில் ஏறிப்போகும் பக்தர்களின் வசதிக்காக தற்காலத்தில் ஏதுவான, சிமெண்ட்கான்கிரீட் மண்டபங்களையும் அமைத்தார்கள். ஏறிச்செல்வோர் அதில் இருந்து இளைப்பாறிச் செல்வதற்கென கருங்கல் இருக்கை (தவிசு)களும் அமைக்கச்செய்தார்கள். கீழேயிருந்து மேல் வரை விசாலமான கருங்கற்படிக் கட்டுக்களையும் கட்டுவித்தார்கள். இவற்றில் அவைகளை அமைப்பதற்குப்பொருளுதவி செய்தவர்களின் பெயர்களையும் கல்வெட்டுக்களாகப் பதியச் செய்துள்ளார்கள்.

அறப்பெருஞ் செல்வர்களின் தவப்பெருஞ்செயல்கள்

தமது மெய்யன்பர்களில் ஒருவரான சைவப் பெருந்தகை **ஈரோடு முருகேச முதலியார்** அவர்களைக் கொண்டு பழனியாண்டவன் மலைமேல் பவனி வருவதற்கென காண்போர் மனத்தையும், கருத்தையும் கவரும் வண்ணம் பேரழகு பொருந்திய தங்கரதமும் மயில்வாகனமும் பெரும்பொருட்செலவில் செய்வித்தார்கள்.

அகத்தியரும் உலோப முத்திரை அம்மையாரும்

தம் பேரன்பர்களில் ஒருவராகிய பெருமண நல்லூர்ப் பெருநிலக்கிழார் **வெங்கடேசம் பிள்ளை** முன்னர்க்கூறிய ஈரோடு முருகேச முதலியார் ஆகிய இருவருடைய பொருட்செலவில் சிதம்பரத்தில் இளமையாக்கினார் கோவிலுக்கு அருகில் அகத்தியராச்சிரமம் ஒன்று நிறுவச் செய்தார்கள். அதனுள் இருகோயில்கள் கட்டுவித்து ஒன்றில் அகத்தியரையும் இன்னொன்றில் உலோப முத்திரை அம்மையாரையும், திருவுருவச் சிலையாக நிறுவினார்கள். அவற்றுக்கு பழனி ஈசான்ய சிவாச்சாரியார் அவர்களைக் கொண்டு மந்திரப்பூர்வமான திருக்குட நன்னீராட்டுச்செய்து திருவருட்பொலிவுடன் விளங்கச் செய்தார்கள். பின்னர் அவர்களைக்கொண்டே ஒருமண்டலம் (48 நாள்கள்) சிவவேள்வியும் நடைபெறச் செய்தார்கள். இதே போன்ற சிவவேள்வியை திருவண்ணாமலை சரசுவதி விலாசம் முதலிய பல இடங்களில் நடத்தியுள்ளார்கள்.

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைப்பருவத்தில் வழிபட்ட பிள்ளையார்

இருபெருஞ்செல்வத் தொருபெருங்குரிசிலும் பெருந்தகைமையாருமாகிய கடைக்கண் விநாயக நல்லூர் (எசுடேட்) சீர்காழி விளைந்திட சமுத்திரம் உயர்திரு **மருதநாயகம் பிள்ளை** அவர்கள் சுவாமிகள் அவதரித்த ஆச்சாள்புரம் என வழங்கும் திருப்பெருமணநல்லூரில் அவர் இளமைப் பருவத்தில் பள்ளிக்குச்செல்லும் சமயம் வழிபட்ட விநாயகர் கோவிலைத் திருப்பணி செய்ததோடு வடக்கு வீதியில் தமக்குச் சொந்தமான தோட்டத்தில் ***சாதுமாமுனிவர் தியான*** நிலையம் என ஓர் அழகிய

கட்டிடத்தைக்கட்டி அதில் சுவாமிகள் திருவுருவப்படத்தையும் நிறுவி என்றும் பூசை நடைபெறும் படியான படித்தரத்தையும் ஏற்படுத்தி ஓர் சிறந்த புண்ணியச்செயல் செய்துள்ளார்கள்.

தனித்திருந்து பலநாள் தவம்புரிந்த குகை

பழனியில் நம் சாதுசுவாமிகள் தனித்திருந்து பலநாள் தவம்புரிந்த குகை, ஆதியாச்சிரமத்தைத் தேவகோட்டை திருமிகு பழ -சு- கண்ணப்ப செட்டியார் அவர்களைக் கொண்டு, அழகிய கெட்டிக்கட்டிடமாகக் கட்டுவித்து தனித்திருந்து தவம் புரிவதற்குத் தகுதியாக வைத்திருந்தார்கள்.

மந்திரத் திருக்கோயிலில் மாமேரு வடிவம்

கொங்கு நாட்டின் மாபெரும் மனிதராகவும் செல்வந்தராகவும் விளங்கிய *சமத்தூர் சமீன்தார் பாலகோபால குழந்தை வேலாயுதசாமி வாணவராயர்* அவர்களுடைய துணைவியார் *ராதாமணி அம்மையார்* தம்பதியினரின் பெரும் பொருளுதவியால் நந்தியடி ஆசிரமத்திற்கு அருகில் அறுகோண மந்திரத் திருக்கோயில் ஒன்று மிக்க அழகுடன் அமைத்தனர். அதன் நடுவில் அழகிய அறுவரைப் பீடத்தையும் அதன் கீழ் நிலவரைக்குகை ஒன்றும் நிறுவினர். அந்த அறுவரைப் பீடத்தின் மேல் மிக்க பொலிவுடன் வனப்பும் பொருந்தச் செய்யப்பெற்ற அனைத்தையும் தன்னுள்ளே அடக்கி விளங்கும் அகில அண்டத்துக்கும் நாயகியாகிய அம்பிகையின் *மாமேரு வடிவத்தை* நிறுவினார்கள். அந்த வளாகத்திலேயே *விநாயகர்* மற்றும் *விசயவைரவர்* ஆகிய இருதெய்வத் திருவுருவச் சிலைகளையும் நிறுவி அன்பர்கள் வணங்கித் திருவருள் பெறச் செய்து வைத்துள்ளார்கள். பழனியம்பதிக்கு வரும் பக்தர்கள் அனைவரும் தவறாது வந்துவணங்கிக் கண்டுகளிக்க வேண்டியது அவசியம்.

தலையன்பு பூண்ட தகைசால் பெரியார்

கொங்கு நாட்டுச் சென்னிமலையில் தோன்றி பழனியில் வசித்துவந்த ஆதிசைவ அந்தணர் குலத்தவர் சிவத்திரு பழனி ஈசானிய சிவாச்சாரியார் அவர்கள். இவர் இளமையிலேயே நல்லாசிரியர் பால், தமிழும் சமசுக்கிருதமும் தெளிவாய்ப் படித்தவர். சைவ ஆகமங்களையும் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்போற்றப்பெறும் சைவ சித்தாந்த நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணந்தவர் கற்றபின் நிற்க அதற்குத்தக என்ற தமிழ் மறையின் மொழிப்படி தாம் கற்றுணர்ந்தவற்றை நடைமுறையில் செய்துகாட்டியும் செயல் முறைப்படுத்தியும் வாழ்ந்து வருபவர். இவர் நம் சாதுமாமுனிவருக்கு வழிபாட்டுக்குரிய வலக்கை போன்றிருந்து திருக்கோயில்களில் தெய்வத்திருவுருவங்களை நிறுவி அவற்றுக்கு விதிப்படி நன்னீராட்டுச் செய்வதிலும் சிவவேள்விகள் ஆயுள் ஓமங்கள் மற்றும் பூசைகள் செய்வதிலும் பெருந்துணையாய் இருந்து அடிகளாரிடத்தில் தலையன்பு பூண்டொழுகிய தகைசால் பெரியார்.

குருதாள் பணியும் கோவை மருதாசலம்

மேதகும் நமது சாதுமாமுனிவரின் மெய்த்தவ மேன்மையைக் கொங்கு நாடெங்கணும் பரவச் செய்தவர் கோவை திரு.மருதாசலக்கவுண்டர் அவர்கள் கோவைப் பகுதியைச் சேர்ந்த மெய்யன்பர்களும் பெருநிலக்கிழார் எனப்பெறும் சமீன்தார்களும் பெருஞ்செல்வர்களும் சாதுமாமுனிவரை நாடிவந்து நல்லுபதேசம் பெற்று சிவபூசையிற் சிறந்தவர்களாகவும், சிவநேயச் செல்வர்களாகவும் மிளிர்ந்தனர் அவர்களையெல்லாம் சாதுமாமுனிவரின் திருவருளுக்குப் பாத்திரராகும்படி செய்தவர் மேற்படி மருதாசலக் கவுண்டரே யாவார்.

சீலத்திரு பாலைய சுவாமிகள்

பழனித் திருவாவினன் குடியில் பழமைமிக்க ஆதீனங்கள் ஐந்து. அவற்றுள் முதன்மையானது சித்தபாலையர் ஆதீனம். நம் சாது மாமுனிவர் பழனியம்பதிக்கு வந்த காலத்தில் மேற்படி ஆதீனத் தலைவராக இருந்தவர், தவத்திரு பாலைய சுவாமிகள். இவர் சித்த பாலையராதீனம் மடத்தை, மிக விரிவானமாளிகையாக அழகுறக்

கட்டியவர். பழனியாண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்தவரும் அன்பர்களுக்கெல்லாம், (குறிப்பாகச் சேரநாட்டு மக்களுக்கு) சொந்த வீடுபோல தங்கியிருப்பதற்கு இடம் கொடுத்துதவுவார். எந்நேரமும் சிறுவர் சிறுமியருக்குத் தின்பண்டம் வாங்குவதற்குக் காசு கொடுப்பார். அன்பர்கள், அடியார்கள் எத்தனைபேர், எந்த நேரத்தில் வந்தாலும் கண்ணும் கருத்துமாக அத்தனைபேர்க்கும் சிற்றுண்டியும் தீம்பால் சுவைநீரும் அளிப்பார். உணவுண்ணும் நேரத்தில் வரும் அடியார்களுக்கு அறுசுவைஉணவளிப்பார். ஏழ்மையான அடியார்களுக்கு வழிச்செலவுக்குப் பணமும் கொடுப்பார். தவத்திரு பாலைய சுவாமிகள் தமிழ் நாட்டுத் துறவியர் சங்கத்தின் புரவலராகவும் துணைத்தலைவராகவும் இருந்தவர். இவர் சாது மாமுனிவரிடத்தில் உள்ளன்பும் உரிமைப்பாடும் உடையவராய் விளங்கியவர். அடிகளாரின் உடல் நலத்தில் கண்ணுங் கருத்துமாகக் குறிப்பறிந்து வேண்டுவன செய்வார். நாள்தோறும் மலைசுற்றிவலம் வரும்போது, நந்தியடிகள் ஆசிரமத்திற்கு வந்து, சாதுமாமுனிவரை வணங்கி, அவரிடம் நெடுநேரம் அளவளாவி இருந்து விடைப்பெற்றுச் செல்வார்கள்.

குறிப்பறிந்து வாரிக்கொடுக்கும் பூலோகக் குபேரர்கள்

இறைவன் தன் அடியார்களுக்கும் மெய்யன்பர்களுக்கும், திருவருள் பாலிக்கும் பொருட்டு திருவிளையாடல் புரிவான். அப்போதெல்லாம் இறைவனுடன் சென்று வேண்டிய அளவு பொருளை வாரி வாரிக் கொடுக்கும் குபேரன்போல, சாதுமாமுனிவரின் சிவப்பணிகளுக்கெல்லாம் வாரிக்கொடுத்த பூலோகக் குபேரர்கள் எனப்புகழப்படும் பெருஞ்செல்வர்கள்.

திருவாளர்கள்

வீரப்பன் அம்பலகாரர் - காளையார் மங்கலம்
வி.வி.சி.ஆர் முருகேச முதலியார் - ஈரோடு
மருதாசலக்கவுண்டர் - கோவை
பாலகோபால வாணவராயர் - சமத்தூர்
வெங்கடேசம்பிள்ளை - ஆச்சாள்புரம்.

மைனர்மருதநாயகம் பிள்ளை - கடைக்காநல்லூர்
மைனர் சிவகுருநாதப்பிள்ளை - கூடப்பள்ளி
கிருட்டிணரெட்டியார் - பெருவளநல்லூர்
மேற்படியார் புதல்வர்கள்
இராசாசிதம்பரரெட்டியார் தியாகராய ரெட்டியார், முத்துக்காபட்டி, பழனியப்பமுதலியார் தேவாரப்பாடசாலைத்தலைவர் சிதம்பரம், பொன்னுச்சாமிக்கவுண்டர் பொள்ளாச்சி. (இதுபோன்று இன்னும் பலர் இருந்ததாகவும் நினைவிற்கு வந்தவற்றை எழுதியதாகவும் முன்பதிப்பில் கூறப்பெற்றுள்ளது.

கூடியிருந்து குலவிமகிழும் குணக் குன்றம்

கல்வியிலும், கேள்வியிலும், ஒழுக்கத்திலும், உயர்பண்பிலும், புலமையிலும், தலைமையிலும், பொழியும் நாவண்மையிலும் எழுதும் பாவன்மையிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது உணர்ந்த துறவிகள் பலர் இருந்தனர். தமிழ்நாட்டின் பெரிய பெரிய ஆதீனத்தலைவர்களும், மடாதிபதிகளும் இவர்களைத் தம்மிடத்திற் சேர்த்துத் தமக்குச் சமமாக வைத்தால் தமக்கிருக்கும் மதிப்பும் சிறப்பும் போய்விடும் என்று எண்ணினார்கள். கிட்டவே சேர்க்காமலும், கண்களாற் பார்க்காமலும் இருப்பதுவே உயர்பண்பு எனக் கடைப்பிடித் தொழுகினார்கள். இவர்களைப் போல் அல்லாமல் நம் சாதுமாமுனிவர் அத்தகைய பெரியவர்கள் எங்கிருந்தாலும் தாமே அவர்களைத் தேடிச் சென்றார். அவர்களோடு அளவளாவி தம் அன்புமொழிகளால் பிணைத்தார். தன்னுடன் அழைத்துக் சென்று அவர்களுக்கு ஒரு தனிமதிப்பும் சிறப்பும் கொடுத்தார். தன்னுடைய அன்பான உபசரிப்பால் அவர்களைத் திக்கு முக்காடச் செய்தார். தாம் எங்குச் சென்றாலும் அவர்களை உடன் அழைத்துச் சென்றார். அவர்கள் கற்றறிந்தவற்றைத் தாமும் கேட்டுப் பிறரையும் கேட்டுப்பயனடையச் செய்தார். அத்தகைய பெரும்புலவர்களோடு கூடியிருந்து குலவி மகிழும் குணக்குன்றமாகத் திகழ்ந்தார்.

தனிமதிப்பும் சிறப்பும் மிக்க சான்றாண்மைத் துறவிகள்

மூன்று வயதிலேயே முற்றும் துறந்த முனிவராய் விளங்கித் துறவிக்குவேந்தனும் துரும்பு எனும் பொன்மொழிக்கு இலக்கணமான *தவத்திரு சுவாமி சைதன்யசிவம்* இவரது மாணவரான தமிழ்ப்பெரும்புலவர் சங்கேந்தி *தவத்திரு குகசதாசிவ அடிகளார், சாது சங்கரானந்தா* (பி.ஏ) அவர்கள், சிற்றம்பலத்தடிகள் மரபு *தவத்திரு ஞானானந்த அடிகளார்* பாடசாலையிலும் மௌன சாமிகளிடத்தும் இருந்தது முதல் இறுதிவரை அணுக்கத் தொண்டராகவும் அன்புமிக்கவராகவும் இருந்த சிதம்பரம் *தவத்திரு சாது சிங்காரவேல்* அடிகள், பழனிபாலையராதீனம் தவத்திருபாலையசுவாமிகள், பழனி பசுமடம் ஆதீனம் தவத்திரு சிங்காரவேல் அடிகள், திருவண்ணாமலை *தவத்திரு பெருமாள்சுவாமிகள், தவத்திரு சி.சுப்பைய ஞானதேசிகசுவாமிகள், தவத்திரு பொன்னம்பலசிவம்,* இந்நூலின் முதற்பதிப்பை எழுதிய சென்னை நாராயண தேசிகர் ஆசிரமம் தவத்திரு *அருணகிரிநாத அடிகள்,* முதலிய பல துறவிகள் சாதுமாமுனிவரின் பேரன்பிற்கு ஆட்பட்டு அவரது உபசரிப்பில் ஊறித் திளைத்தார்கள் என்பதே உண்மை.

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்

சாது சுவாமிகள் அவர் ஏற்படுத்திய அறப்பணிகளையும் ஆசிரமங்களையும் அவருக்குப்பின் செவ்வனே நடத்தி வருவதற்காகத் தமது மாணவர்களில் மூவரை ஏற்படுத்தியிருந்தார்கள்.

துறவறத்தார் தங்குவதற்கெனக் கட்டப்பட்டுள்ள நந்தியடிகள் ஆசிரமம் வயல் தோப்பு கொற்றவை கோயில் நந்தவனம், சமாதிக்காடு முதலியவைகள் அடங்கிய சொர்க்காச்சிரமம், இல்லறத்தார் தங்குவதற்குரிய நந்தியடிகள் நிலையம் முதலியவற்றிற்கு தவத்திரு நாக்பூர் சுவாமிகளையும், அடியார்களுக்கும், அன்பர்களுக்கும் அன்னம்பாலிக்க ஏற்படுத்திய சண்முக விலாச அன்னதான நிலையத்திற்கு *தம்பிச்சாமி* எனப்பெற்ற

தவத்திரு குமர குருபரசுவாமிகளையும், மலைக்கோயில் அருள்மிகு தண்டாயுதபாணிக்கு கால பூசைகள் செவ்வனே நடைபெற ஏற்படுத்திய படித்தரக் கட்டளைகளை நடத்திவருவதற்கு சின்னசாமி என வழங்கிய தவத்திரு சிவக்குமார சுவாமிகளையும் அதிபர்களாக நியமித்து வைத்தார்கள். இம் மூவர்களும் தங்கள் தங்கள் பணிகளைச் சாது சுவாமிகள் என்னும் தாய்வாழையில் தோன்றிய கன்றுகளாக இருந்து கவனித்து வந்தார்கள்.

திருவருணைத் திருக்கூட்டத் தலைவர்

திருவண்ணாமலையில் திருவருணைத் திருக்கூட்டம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, நம் சாதுசுவாமிகள் அதன் நிரந்தரத்தலைவராக இருந்தார்கள். தம் அன்பர்களைப் பிரதிநிதிகளாக நியமித்துத் திருவருணைத் திருக்கூட்டத்தைச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். பொது மக்களிடம் மேற்படித் திருக்கூட்டத்திற்காக வசூல் செய்து சேமித்து வைத்திருந்த ரூ.2200/- (ரூபாய் இரண்டாயிரத்து இருநூறுக்கு திருவண்ணாமலை நகர், 1/20 மேலமாட வீதி என்னும் மேலக்கோபுரத் தெருவில் 1329 சதுரஅடி (5 செண்ட்) அளவுள்ள மனை மற்றும் அதிலிருக்கும் சிறிய தட்டோட்டுக் கட்டிடம் உள்பட வாங்கி, அதனை தம் மாணவர் நாகப்பூர் சுவாமிகள் பெயரில் கிரையம் செய்து வைத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க நிரந்தரத்தலைவர்கள்

விரோதியாண்டு மார்கழித் திங்கள் 21ஆம் நாள் புதன்கிழமை (4-1-1950) அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற ஆருத்ராதரிசனத் திருவிழா விற்கு எழுந்தருளினார்கள். அங்கு ஈரோடு முருகேச முதலியார் இல்லத்தில் தங்கியிருந்தார்கள். அப்போது சென்னை தவத்திரு ச.சச்சிதானந்தம்பிள்ளை பி.ஏ.எல்.டி., சிதம்பரம் நந்தனார் மடம், தவத்திரு சகசானந்த அடிகள், எம்.எல்.ஏ., தில்லையடி விவேகானந்தர் ஆசிரமம், தவத்திரு சாது சங்காரனந்தா பி.ஏ., திருவண்ணாமலை தவத்திரு பெருமாள்சுவாமிகள் சென்னை தவத்திரு சுவாமி அருணகிரிநாதர்

தவத்திரு சாது சிங்காரவேல் அடிகள் திருக்குற்றாலம் தவத்திரு சுகானந்த அடிகள் சங்கேந்தி தவத்திரு கு.க.சதாசிவ அடிகள் முதலானவர்கள் நம் சாது சுவாமிகளிடம் வந்து, வணங்கித் தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்திற்கு நிரந்தரத்தலைவராக இருக்க வேண்டும் என மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். சுவாமிகளும் அவர்களுக்குத் திருநீறு அளித்து அருள்பாலித்தார்கள்.

எட்டுத் திங்களும், திட்டப்பணிகளும்

விரோதியாண்டு மாசித் திங்கள் 7 ஆம் நாள் புதன்கிழமை (22-2-1950) அசுவினி நட்சத்திரம் கூடிய நன்னாளில் பெருவளநல்லூரில் ஆசிரமத்தில் நடைபெற்ற நந்தியடிசுவாமிகளின் 22 ஆம் ஆண்டுக் குருபூசை விழாவின்போது நடைபெற்ற தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கப் பொதுக்குழுக்கூட்டத்தில் நமது சாதுமாமுனிவர், தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்தின் நிரந்தரத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். சீர்திருத்தியமைக்கப்பெற்ற திருவருணைத் திருக்கூட்டத்தையும், தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கத்துடன் இணைத்தார்கள். மேற்படிச் சங்கம் சீரியமுறையில் செய்லபடத் திட்டமிட்டார்கள். அதனை நடைமுறைக்குக் கொண்டுவர சில அடியார்களுக்குக் கட்டளையிட்டார்கள். தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள்.

விக்ருதியாண்டு ஆனித்திங்கள் 17 ஆம் நாள் (1-7-1950) சனிக்கிழமை ஆனித்திருமஞ்சனத்தன்று சிதம்பரத்தில் அகத்தியராச்சிரமத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டுத்துறவிகள் சங்கப் பொதுக் கூட்டத்திற்கு சாதுமா முனிவரே தலைமை தாங்கி நடத்தினார்கள். இந்த எட்டுமாத காலத்தில் சாது மாமுனிவர் தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்தைத் திட்டமிட்டு வளர்த்தார்கள்.

சிறிது உடல் நலம் குன்றியதால், சாது மாமுனிவரின் தவத்திற்காக திரு.வேங்கடேசம் பிள்ளையவர்களால் தமது பண்ணையருகில் கொள்ளிடக் கரையில் அமைக்கப் பெற்றிருந்த

சரசுவதி விலாச நிலையம் என்னும் வளாகத்தில் சென்று தங்கி சிலநாள் ஓய்வெடுத்தார்கள்.

பழனியம்பதி திரும்பி, பரிபூரண ஒழிவில்ச் ஒடுக்க சமாதிநிலை எய்துதல்

விக்ருதியாண்டு ஐப்பசி மாதத்தில் (1950 அக்டோபரில்) பழனியம்பதிக்குத் திரும்பினார்கள். சாது மாமுனிவர் எனும் பெயர் தாங்கிய இத்திருமேனியோடு இருந்து ஆற்றிய அருந்தவமும் அறப்பணிகளும் திருப்பணிகளும், வேள்விகள் முதலான சிவப்பணிகளும் போதும் இனிமேல் நம் திருவடிகளில் இரண்டறக்கலந்து அமைதிபெற்று பேரின்பப் பெருங்கடலில் மூழ்கிப் பெருமகிழ்ச்சிப் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுப்பொலிக" எனப் பழனியாண்டவன் விரும்பினான் போலும். விக்ருதியாண்டு ஐப்பசித் திங்கள் 21 ஆம் நாள் திங்கட்கிழமை (6-11-1950) தேய்பிறை 11 ஆம் நாள், உத்திரநட்சத்திரம் கூடிய நன்னாளில் காலை 9 நாழிகை (9-45 மணி) யளவில் படுக்கையிலிருந்து வடக்கு முகமாய்ப் பழனிமலையை நோக்கி இருகைகளையும் கூப்பிப் *பழனியாண்டவனை வணங்கிய வண்ணம் நமது சாது மாமுனிவர் பரிபூரண சிவாநந்த ஒழிவில் ஒடுக்க முத்தியை அடைந்து இறையருளில் இரண்டறக் கலத்தல் என்னும் சாயுச்சிய பதவிபெற்றுத் திருவருளில் திளைத்தார்கள்.*

சாதுமாமுனிவர் சமாதிநிலை அடைந்தது கேட்டு அவரது மாணவர்களும் அடியார்களும் மெய்யன்பர்களும் பல ஊர்களிலிருந்தும் வந்து குழுவினர். கண்டு வணங்கினர் வாய்விட்டரற்றினர் கண்ணீர் மல்கக் கலங்கி வருந்தினர் பழனித் திருக்கோயில் நிர்வாகத்தினரும் திருவாவினன்குடிச் சித்தபாலையர் ஆதீனம் தவத்திரு பாலைய ஞானதேசிக சுவாமிகளும், சாதுமாமுனிவரின் திருமேனிக்கு அமுதநீராட்டி ஆராதனை செய்ய வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் முன்னின்று செய்தனர். திருக்கோயில் மேள தாள வாத்தியமரியாதைகளோடு வந்து சேவித்தனர். பழனி ஞானதண்டாயுதபாணிக்கு பாலும் தேனும் பஞ்சாமிர்தமும் குடம் குடமாக விட்டு அபிடேகம் செய்தும், பலவகையான மலர்களால் அலங்காரம் செய்தும் மகிழ்ந்த சாது என்னும் பெயர் கொண்டு அந்த மகாத்மா தங்கியிருந்த அத்திருமேனிக்கு அமுதநீராட்டி அலங்காரம் செய்து,

தீபாராதனை முதலான சிறப்புற நடத்தினர். முன்னமே சமத்தூர் சமீன்தார் பாலகோபால குழந்தை வேலாயுதசாமி வாணவராயர் அவர்களால் அமைக்கப் பெற்றிருந்த அறுகோண மந்திரத் திருக்கோயிலின் நடுவில் உள்ள அறுவரைப் பீடத்தின் கீழ் கட்டி வைத்திருந்த நிலவரைக்குகையில் சாது மாமுனிவரின் பொன்னார் திருமேனி சமாதி செய்யப்பெற்றது. அதன்மேல், அடிகளார் முன்பு வைத்து வழிபட்டுவந்த அன்னை பராசக்தியின் மகாமேரு வடிவம் நிறுவப்பெற்றது. பத்தாம்நாள் முத்திவழிபாடும் மண்டலாபிடேகமும் மிகச்சிறப்பாகச் செய்யப்பெற்றது. அன்று முதல் நாள்தோறும் வழிபாடுகளும் ஆண்டுக்குருபூசை விழாவும் நிறைவாக நடைபெற்று வருகின்றது.

சாதுமாமுனிவரின் மேதகு புகழ், நின்று நிலவுக உலகெலாம்

அறப்பெருஞ்செயல்களுக்கு வழித்துணையாய் வந்தவர்

சாது சுவாமிகள் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு அரும் பெரும்பணிகளிலும் உற்றதுணையாக இருந்தவர் சுவாமிகளின் முதல் மாணவராகிய தவத்திரு நாகப்பூர் சுவாமிகள் எனப்பெறும், முத்துச்சாமி சுவாமிகள் ஆவார். அவர்கள் சாது சுவாமிகள் திருவுளத்தில் நினைப்பதைக் குறிப்பால் அறிந்து செய்து முடிக்கும் ஆற்றல் மிக்கவர்கள். சுவாமிகளின் கட்டளைக்கு மாறுபாடின்றி மனம்கோணாத அன்புடன் தொண்டு செய்துவரும் மதிநுட்பம் வாய்ந்தவர்கள்.

நாகப்பூர் சுவாமிகள் 1909 ஆம் ஆண்டு பழனிமலை மீதும் திருவாவினன்குடியிலும் நடந்த அட்டபந்தன மகாகும்பாபிடேகத்தின் போது பழனிக்கு வந்து சேர்ந்தார்கள். துறவு நிலைமேற் கொண்ட அவர்கள், மலைக்குத் தென்புறம் உள்ள நந்தன் தோப்பு சமாதாலயத்தில் முத்துச்சாமி என்ற பெயரோடு தங்கித் தவமியற்றிக் கொண்டிருந்தார்.

கொடுநோய் பரவுதலும் வடநாடு சென்று திரும்புதலும்

அப்போது பழனியில்- பிளேக் என்னும் கொடிய உயிர்க்கொல்லி நோய் பரவியது. அது கண்ட ஆட்சியாளர் அனைவரையும் வெளியேறும்படி கட்டளையிட்டார்கள். அதுசமயம் நமது முத்துச்சாமி சுவாமிகளும் பழனியம்பதியை விட்டுப் புறப்பட்டனர். பல திருத்தலங்களுக்கும் பயணமாகச் சென்று, இறுதியாக வடநாட்டில் உள்ள நாகப்பூருக்குச் சென்று பல ஆண்டுகள் தங்கித்தவம் இயற்றியிருந்தனர். பின்னர் புறப்பட்டு மீண்டும் பழனிக்குத் திரும்பினார்கள். அதுமுதல் முத்துச்சாமி சுவாமிகளுக்கு நாகப்பூர் சுவாமிகள் எனப்பெயர் வழங்கலாயிற்று.

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

நாகப்பூர் சுவாமிகள் முன்பு தங்கித் தவமியற்றிய ஆச்சிரமத்திலேயே மீண்டும் தங்கினார். வேள்விக்குண்டம் அமைத்து நித்தமும் வேள்வி செய்து ஓமாக்கினி வளர்த்து வந்தனர்.

அதன் முன்னிருந்து *"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"* என்ற மந்திரத் தொடரை கோடிக் கணக்கான முறை உருவேற்றி வந்தனர். ஞானாசிரியன் வந்து தனக்கு அருள் செய்ய வேண்டும். என்ற குறிக்கோளுடன் தவம்புரிந்து வந்தார்கள்.

1914 ஆம் ஆண்டு நம் சாது மாமுனிவர்கோவணதாரியாகப் பழனியம்பதிக்கு வந்தார்கள். அப்போது அவர்களைக் கண்டு வணங்கி இவ்வருளாளரையே குருவாக அடையவேண்டும் என மனத்தில் எண்ணினார்கள். அதற்குரிய வாய்ப்பு அப்போது ஏற்படவில்லை. சாது சுவாமிகள் திரும்பவும் திருத்தலப்பயணம் மேற்கொண்டு வெளியே சென்று விட்டார்கள். ஆயினும் அவர்களையே குருவாக அடைவேன் என்ற உறுதி நாகப்பூர் சுவாமிகளின் மனதில் சிறிதும் குறையவில்லை.

அறப்பெரும் பணிகள் திறம்படச் செய்தல்

சாதுமாமுனிவர், திருத்தலப் பயணங்களை முடித்துக் கொண்டு, குரு நந்தியடிகளார் கட்டளைப்படி பழனியம்பதிக்குத் திரும்பியதும், நாகப்பூர் சுவாமிகள் எதிர்கொண்டழைத்து இணையடி வணங்கினார். முன்னமே நம்மை ஆட்கொண்டருளிய ஆண்டவன் குரு மூர்த்தியாகச் சாது மாமுனிவராக எழுந்தருளியிருப்பதாகக் கருதினார். அன்றே எனது ஆவியும் உடலும் உடைமை எல்லாமும், குன்றே அணையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ? என அனைத்தையும் குருநாதனுக்கே உரிமையாக்கி ஞானோபதேசம் பெற்றார்.

குருவடித் தொண்டும் திருவடிப்பேறும்

குருநாதராகிய சாதுமாமுனிவர் மறைவிற்குப் பிறகு அவர் பணித்த வண்ணம் நந்தியடிகள் ஆச்சிரமம் சொர்க்காச்சிரமம், இல்லறத்தார் நிலையம் ஆகியவைகளின் நிர்வாகத்தை ஏற்று, பணிகள் யாவும் இனிதே நிறைவேறப் பலமெய்யன்பர்கள் மூலம் ஐந்து லட்ச ரூபாய் வரை செலவு செய்து பணிகளைச் செவ்வனே செய்துவந்தார்.

பிரமாதீச ஆண்டு ஆவணித் திங்கள் 17 ஆம் நாள் (02.09.1973) ஞாயிற்றுக்கிழமை சுவாதி நன்னாளில், பரம சற்குருநாதன் திருவடிகளில் இரண்டறக் கலந்து திருவருட் பேறடைந்தார்கள்.

கொங்குநாட்டுத் தம்பிச்சாமி - குமரகுருபரர்

நாகப்பூர் சுவாமிகளுக்கு அடுத்த நிலையில் நம் சாதுமாமுனிவர்பால் பேரன்பு பூண்டவர் தம்பிச்சாமி என வழங்கிய தவத்திரு குமரகுருபர அடிகளார். இவர் கொங்கு நாட்டு வேட்டைக்காரன் புதூரைச் சேர்ந்தவர். தொண்டை நாட்டுச் சைவ வேளாள மரபினர். பெருநிலக்கிழார் குடியிற்பிறந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பி.ஏ., வரை படித்தவர். சேரநாட்டு இளங்கோ அடிகளைப் போல இளமையிலேயே துறவறம் பூண்டவர். இரும்பைக் கவர்ந்திழுக்கும் காந்தம்போல் சாதுமாமுனிவர் என்னும் காந்தமலையால் கவரப்பெற்றவர். தம் உடைமை எல்லாமும் குருநாதருக்கே உரிமையாக்கி பசுமை நிற ஆடையுடுத்தி பற்றற்றுப் பணிபுரிந்து வந்த பண்பாளர். துன்முகி ஆண்டு பங்குனி மாதம் ஐந்தாம் நாள் (18-3-1957) திங்கட்கிழமை தேய்பிறை மூன்றாம்நாள் சித்திரை நட்சத்திரம் கூடிய நன்னாளில் குருநாதனின் திருவடியிற் கலந்து சித்தி பெற்றார்கள்.

தம்பிச்சாமி என வழங்கிய தவத்திரு குமரகுருபரசுவாமிகளின் திருமேனி வரத்தாற்றங்கரையில் உள்ள சொர்க்காசிரமத்தில் எழுந்தருளியிருக்கும் நான்குமுகக் கொற்றவை கோயிலுக்கு முன்பாகச் சமாதி வைக்கப்பெற்று வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

சின்னச்சாமி என வழங்கிய சிவக்குமார சுவாமிகள்

நம் சாது மாமுனிவர் தமக்குப்பின் அறப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற நியமித்த மூவரில் முதலிருவராகிய நாகப்பூர் சுவாமிகளும் தம்பிச்சாமி என வழங்கிய குமரகுருபரசுவாமிகளும் அமரத்துவம் பெற்றபின் சுமார் 25 ஆண்டுகள் தனியொருவராக இருந்து அனைத்துப் பணிகளையும் சிறப்பாக நிறைவேற்றியவர் தவத்திரு சிவக்குமார சுவாமிகள் ஆவார்.

இவர் கொங்கு நாட்டுக் கோவை நகரின் வடக்கில் உள்ள கணபதி என்னும் கிராமத்தில் (தற்போது கோவை மாநகராட்சிக்குட்பட்ட ஒரு பகுதியாக உள்ளது) வடக்குத் தோட்டம் சாத்தந்தை குலம் திருமிகு.கருப்பகவுண்டர் திருமதி.மாராத்தாள் ஆகியோர் செய்ததவப்பயனாய் 1918 ஆம் ஆண்டில் பிறந்தவர்.

இளமையிலேயே துறவறம் மேற்கொண்டு கோவை சிரவணபுரம் கௌமார மடம் தவத்திரு இராமானந்த சுவாமிகள் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஆகியோரால் ஆட்கொள்ளப்பட்டவர். எப்போதும் பூக்கொய்துமாலை தொடுப்பதில் ஆர்வம் கொண்டவர் ஆதலால் இவரை இப்பகுதி மக்கள் ' பூச்சாமி ' எனவும் பூவாஞ்சாமி எனவும் அன்போடு குறிப்பிடுவார்கள். இளந்துறவியாக இருந்தபோது ஒருநாள் நள்ளிரவில் மருதமலைக்கு அருகில் இருந்த ஓர் ஓடையில் பாறை மீது தனியே முருகனை எண்ணிப்படுத்திருந்த போது முருகன் தோன்றி பழனியம்பதிக்கு வருக எனப் பணித்தான். இவர் அப்போதே புறப்பட்டு மறுநாள் பழனிவந்து சேர்ந்து சாதுமாமுனிவரின் அருள்நோக்கிற்கு இலக்காகி அவரது மாணவராக ஆனார்.

இவர் காலத்தில் எல்லாப் பணிகளும் சிறப்பாக நடைபெற்றன. தம் தள்ளாத வயதிலும் முன்னின்று தாமே பணிகளைக் கவனித்து வந்தார். இவர் தமக்குப்பின் ஒரு வாரிசை நியமிக்க வேண்டி தக்கார் ஒருவரை அனுப்பி வைக்கும்படி பேரூராதீனம் கயிலைமாமுனிவர் தவத்திரு சாந்தலிங்கராமசாமி அடிகளார் அவர்களைக் கேட்டுக் கொண்டார். அதன்படியே பேரூராதீனத்தில் பூசைப்பணியில் இருந்த சண்முகம் என்பவரை பேரூரடிகளார் அவர்கள் அனுப்பிவைத்தார்.

திரு.சண்முகம் அவர்களை ஓராண்டுக்காலம் தன் உடன் இருத்தி அவர் பணியாற்றும் பாங்கினை உணர்ந்து பவ ஆண்டு தைத்திங்கள் 8 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (22-1-1995) ஆறாம்பிறை அத்த நட்சத்திரம் சித்தயோகம் கூடிய நன்னாளில் சண்முகம் அவர்களுக்குக் கல்லாடையும் பூசைப்பணியும் கொடுத்து உயில்சாசனம் செய்து தமது வாரிசாக நியமித்தார். மிகத்தளர்ந்த நிலையில் தம் 77 ஆவது வயதில் பவ ஆண்டு பங்குனித் திங்கள் 30 ஆம் நாள் (13-4-1995) வியாழக்கிழமை உத்திரத்திரு நட்சத்திரத்தில் தம் குருநாதராகிய சாது சுவாமிகளின் திருவடி நிழலில் கலந்து சமாதி நிலை எய்தினார்கள்.

தவத்திரு சாது சண்முக அடிகளார்

தற்போது மடாதிபதியாக இருந்து அருளாட்சி செய்து வருபவர் தவத்திரு சாது சண்முக அடிகளார். இவர் கோவைக்கு மேற்கே, மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலில் உள்ள தென்னம நல்லூரில் கொங்கு வேளாள ஆடகூட்டத்து மரபைச் சேர்ந்தவர். தந்தையார் திருமிகு. அய்யாக் கவுண்டர், தாயார் திருமதி முத்தம்மாள். கர ஆண்டு பங்குனித் திங்கள் 18 ஆம் நாள் (31-3-1952) திங்கட்கிழமை ரோகிணி நட்சத்திரம் கூடிய நன்னாளில் பிறந்தவர். சுறு சுறுப்பும் துடிப்பும் மிகுந்த அவரது இளமைப் பருவம் பள்ளியிலும் பிரதிபலித்தது. உயர்நிலைப்பள்ளியில் இறுதிவகுப்புவரை படித்த இவர் புலவர் வகுப்பிலும் பயிற்சி பெற்றுள்ளார்.

சண்முகம் என்பது பிள்ளைத் திருநாமம். புலவர் வகுப்பில் பயின்று கொண்டிருக்கும் போதே மனம் துறவறத்தில் நாட்டம் கொண்டது. தமிழ் முறைப்படி திருக்குட நன்னீராட்டு மற்றும் திருமணம் செய்வதில் ஆர்வம் கொண்டார். இதற்கு வித்திட்டவர் பேரூராதீனம் கயிலைமாமுனிவர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் ஆவார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிரவையாதீனம் தவத்திரு சுந்தர சுவாமிகள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

பேரூர் அடிகளார் அவர்களுடன், அவர் செல்லும் திருக்கோயில்களுக்கெல்லாம் சென்று தமிழ் முறைத் திருக்குட நன்னீராட்டுச் செய்வதில் மிகுந்த செயல் முறைப்பயிற்சி பெற்றார்கள். திருமுறைப் பாடல்களை இசையோடு பாடுவது, இவருக்கு இயற்கையாக அமைந்த திறமையாகும்.

எல்லோருடனும் எளிமையாகப் பழகும் இனிமை வாய்ந்தவர். ஆதலால் இவருக்கு ஏராளமான நண்பர்கள் உண்டு.

பாடல் பெற்ற தலங்களுக்கெல்லாம் பயணம் செய்துள்ள இவர் ஐந்து முறை வடநாட்டில் திருத்தலப் பயணம் மேற்கொண்டு பன்னிரு சோதிர் லிங்கங்கள், காசி, பத்ரிநாத், கேதாரிநாத், நேபாளம் மற்றும் அனைத்துத் திருத்தலங்களையும் அடியார்களுடன் சென்று வழிபட்டுள்ளார்கள். இலங்கை, சிங்கப்பூர், மலேசியாப்பயணம் மேற்கொண்டு உலகச் சைவப் பேரவை மாநாட்டில் கலந்து கொண்டதுடன் அங்குள்ள தலங்களையும் வழிபட்டு வந்தார். தவத்திரு சாது மாமுனிவர் நியமித்தவர்களில் இறுதியாக இருந்த தவத்திரு சிவக்குமார சுவாமிகளின் வேண்டுகோளுக்குக்கிணங்க, பேரூராதீனம் குருமகா சந்நிதானம் அவர்களால் பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 9 ஆம் நாள் 26-10-1994 புதன்கிழமையன்று பழனிக்கு அனுப்பி வைக்கப்பெற்றார்.

தவத்திரு சாதுசுவாமிகளின் சண்முக விலாச அன்னதான நிலையத்தில் தவத்திரு சிவக்குமார சுவாமிகள் அவர்களிடம் நிர்வாகப் பயிற்சியும், செயல்முறைப்பயிற்சியும் பெற்றார். பவ ஆண்டு தைத்திங்கள் 8 ஆம் நாள் (22-1-1995) ஞாயிற்றுக்கிழமை ஆறாம்பிறை -அத்த நட்சத்திரம் கூடிய நன்னாளில் கல்லாடையும் மகாமேரு வழிபாடும் இவரிடம் அளிக்கப்பெற்றது. ***சாது சண்முக அடிகள்*** எனும் தீக்கைத் திருநாமமும் கொடுக்கப்பெற்றது.

தவத்திரு சிவகுமார சுவாமிகள் சமாதியடைந்தபின் பவ ஆண்டு பங்குனித் திங்கள் 30 ஆம் நாள் (13-4-1995) குருவாரமான வியாழக்கிழமையில் பங்குனி உத்திர நன்னாளில் பட்டமேற்று குருபீடத்தில் அமர்ந்து நிர்வாகம் செய்து வருகிறார்.

உ

ஓம் நந்திகுரவே நம

சாது குரு நவமணிமாலை

ஆசிரியர்

கோவை கவியரசு வித்துவான் கு.நடேசக் கவுண்டர்

பழநி அருட்டிரு சாதுசுவாமிகள் மண்டலாபிடேகத் திருநாள் வெளியீடு

காப்பு வெண்பா

சாது குருவின் தடந்தோட் கிடந்தொளிர
ஒது நவமணிமா லைக்குதவும் கோதன்
திருமாலும் தேடரிய செம்மைய தாய் வேதக்
கருவூலம் சேர்மாதங்கம்

வெண்பா

திருவும் படிப்புமிகு சீரும் எனக்கு
மருவும் படியளித்த வள்ளல் - குருவாகி
வந்தடிமை கொண்டருளு மாதவனே சாதுவே
தந்தையொடு தாய் செய்தவம்.

சாதுகுரு நவமணிமாலை

கட்டளைக் கலித்துறை

தம்பெரு மாண்பினைத் தாமறி யார்பெரியோ
ரெனுஞ்சொல்
வம்பல வென்பதை யானறிந்தேன்
மறை நான்குமயன்
உம்பருந்தேறருஞ் செம்பொருள்
சாது வுருவுடைத்தாய்
எம்பொருட் டால் எளி வந்ததன்றோ
இவ் விருநிலத்தே

அறுசீரடி யாசிரிய விருத்தம்

நிலவு குலவும் சடைமறைத்தாய்
நெற்றி யொற்றைக் கண்மறைத்தாய்
உலகு நடுங்க வரும்விடத்தை
உண்ட கண்டக் கறைமறைத்தாய்
குலவியெமதுட் குடியிருக்கும்
குருவே சாதுக் கோமானுன்
அலகில் கருணை விழிக்கடையில்
அனைத்தும் வெளியா யினவாலோ

எழுசீராசிரிய விருத்தம்

ஆலநன் நிழலோ கயிலையி னுச்சி
யணிமணி மண்டபமேயோ
மாலயன் அமரர் திருநடங் காணு
மன்றமோ நின்றிருக் கோயில்
சீலமுந் தவமும் கருணையு முருவாய்த்
திகழ்குரு சாதுவே வேத
நாலவை முடிவோ உழுவலன் பினருள்
நளினமே நவின்றரு ளெமக்கே

ஆசிரியப்பா

நவிலுந்தகைத்தோ நவிலுந்தகைத்தோ
புவியவ ரன்றிப் பொன்னுல கோரும்
சவிமணிப் பணாடவிச் சருப்ப ராசனும்
நவிலுந் தகைத்தோ நவிலுந் தகைத்தோ
ஊழியும் வாழிருங் காழியி லேழிசை
யின்றமிழ் விரக னென்றவ தரித்தோன்
திருமணம் புணர்ந்து பெருமண நல்லூர்ச்
சோதியிற் கலந்து மேதினி யுள்ள
ஆண்டிருந்தே பின் மீண்டது போலச்
சாது வென்ன வோதும் பெயரொடு

வந்தனை பெரும், சந்த நான் மறையும்
செந்தமி ழுந்தேர் நந்திய டிகளின்
சிந்தைக் குகந்த திருத்தவச் சேயாய்
பழ மறைகள் முழுது ணர்ந்தனை
வேத நெறி விளங்கு வித்தனை
சைவத் துறை தழை வித்தனை
திருவா மூரில் வருநா வரசென
நீற்றுக் கோலந் தோற்றிப் பொலிந்தனை
மறத்துறை துரத்தினை யறத்துறை வளர்த்தனை
கைத்தொண்டு செய்தனை கருணை மிகுத்தனை
நாவ லூர்வரு நம்பி போலச்
சிவ யோக நெறி நின்றனை
திருவாத வூரன் போல்
ஒருவாத பேரன்பினை
அகத்தியன் வசிட்டன் துருவாச னாதி
முனிவர்போன் முதல்வி சமயமும் பயின்றனை
மந்திரம் தந்திரம் மயக்கற வல்லனை
அடியவருக் கருட்குரு நீ
மிடியர்பசிப் பகைஞனு நீ
செல்வர் நன்னெறியிற் செலவிட வருளினை
கல்வி யாளர்க்குக் கடவுளைக்காட்டினை
எல்லோ ரையுமே நல்லா றுய்த்தனை
என்றென் றெடுத்தே எனைத்து நாளோதினும்
புலத்துறை கொண்டவன் புகலுமாறே.

நெடுந்தாண்டகம்

மாற்றுயர்ந்த பசும்பொன்னால் வகுத்தாற் போல
வயங்குதிரு மேனியிற்கல் லாடை யுண்டே
கீற்றுமதி போலநுதல் வெண்ணீறுண்டே
கிளர்நுதற்கண் ணெனவொளிர்சிந் தூரமுண்டே
ஊற்றிருந்து கருணைபொழி விழிக ளுண்டே
உளங்கவரு முத்தனபுன் முறுவலுண்டே
ஏற்றவருக் கில்லையெனா ஈகையுண்டே
எங்கள் குரு சாது வெனும் எதிரா சர்க்கே

தரவுகொச்சகக் கலிப்பா

சாதுவெனும் பெயர்தனக்கே தகுந்ததவ முனிவனெவன்
மாதுயரப் பிறவிநோய் மாற்றுமருத்துவனுமெவன்
ஆதுலருக் கன்னையென அமுதமளிப்பவனுமெவன்
கோதுநிக ரவனடியென் புன்றலைக்கு மணியாமே

வெளிவிருத்தம்

அணிகொண்ட திருமன்றி லருளாடல் புரிவானும் - அவனே போலும்
பணிகொண்ட பாயல் மிசைப் பாற்கடலிற் றுயில்வானும் - அவனே போலும்
மணிகொண்ட செந்நாவில் மறைபயிலு மிறையோனும்- அவனே போலும்
பிணிகொண்ட பிறப்பறுக்கும் குருசாதுப் பெரியோனும் - அவனே போலும்

சந்த விருத்தம்

உம்பர்க்கரி தாகிய செம்பொருளுன்
உள்ளத்துள தொண்பொருள் கல்விதரும்
செம்பொற்கொடி யாருள கண்மலரிற்
திகழ்கின்றனர் கற்பக மங்கையதே
எம்பற்றென வந்தருள் சற்குருவே
இசைசாது வெனும்பெய ருக்குரியாய்
அம்பொற்கம லக்கழ லிற்பொலியும்
அடியார்விழை மோக்க மெனுந்திருவே.

சாதுசற்குரு தாண்மலர் வாழ்க!

திருஞான சம்பந்தன் சேவடி வ ழ்க!

